[illegible]

[illegible] [illegible]

[illegible] 1954

SL
891.44, N27SN
N34.8.1
186942

1245 O. M. 2302.


1245

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF B...
7- SEP 1934
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு அ. § பலவான்குடி—பவ—ஆவணி § திங்கள் க.


| எண் | உள்ளுறை. | | பக்கம். |
|---|---|---|---|
| | சிவநேசன் ஏழாவதாண்டின் உள்ளுறை: | | |
| க. | சிவநேசன் | ... | 1 |
| உ. | சிவநேசனுக்கு வாழ்த்து | ... | 2 |
| ங. | நூல் வெளியீடு | ... | 4 |
| ச. | சிவாதிக்யம் | ... | 5 |
| ரு. | ஆஸ்திகர்களே! அஞ்சாதீர் | ... | 8 |
| சு. | வேண்டுகோள் | ... | 12 |
| எ. | தில்லைத்திருவாயிரம்: திருப்புகழ் | ... | 13 |
| அ. | தன்சரிதம் உணர்த்தும் தம்பிரான்றோழர் | ... | 15 |
| கூ. | செந்தமிழ்ச் செய்யுட்கள் | ... | 20 |
| ய. | சமயக் கல்வி | ... | 21 |
| கக. | 'சிவநேசன்' வேண்டுகோள் | ... | 24 |
| கஉ. | பழமலைக்கோவை | | (73-80) |
| கங. | தேவிகாலோத்தர ஆகமம் | | (1—8) |


ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,

பல்லவான்குடி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பலவான்குடி

## மணிவாசகசங்கத்தின்

## இருபத்து நான்காவது

# ஆண்டுத் திருவிழா அழைப்பு.

திருச்சிற்றம்பலம்.

தேவர்கோ வறியாத தேவ தேவன்
  செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
  மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
  யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியா ரோடும்
  மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே.

(திருவாசகம்)

திருச்சிற்றம்பலம்.

**சிவநேசச் செல்வராகிய ஐயா!**

திருவருளால் மணிவாசகசங்கத்தின் இருபத்து நான்காவது ஆண்டு நிறைவுத்திருவிழா, பவ–ஆவணி–சஉ (22–8–1934) புதன்கிழமை உத்திராடநாள் முற்பகல் பிற்பகல்களில் திருக்கோயில் வழிபாடு, தேவார, திருவாசக, திருவுலாக் காட்சிகளும், தக்கார் தலைமையில் மிக்க பேரறிஞர்களின் விரிவுரைகளும் நிகழ நடைபெறும். அன்பர்களுடன் வந்து குழுமி இன்புற வேண்டுகிறோம்.

பவ–ஆவணி }
சஉ }

தங்களன்புள்ள
மணிவாசக சங்கத்தினர்.

உ

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

OFFICE OF THE [...] 7 - SEP 1934 [...] MADRAS

## பலவான்குடி

# "சிவநேசன்"

## ஏழாம் ஆண்டுத் தொகுதி.

ஸ்ரீமுக ஆவணி முதல்
பவ ஆடி வரை

பலவான்குடி
"சிவநேசன்" அச்சியந்திரசாலையில்
பத்திராதிபர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால்
அச்சியற்றி வெளியிடப் பெற்றது.

1934

சென்னைப் பதிவு எண் 2302

சிவமயம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# "சிவநேசன்"

## ஏழாவதாண்டின் உள்ளுறை.


| கட்டுரையின் பெயர். | எழுதிய திருவாளர்கள் | பக்கம் |
|---|---|---|
| அகத்திய முனிவரைப்பற்றிய ஆராய்ச்சி | கா. சுப்பிரமணிய பிள்ளை M. A. M. L. | 290 |
| அந்தம் ஆதி | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 80 |
| அப்பைய தீக்ஷிதர் மகிமை | ... நல். கண்ணப்ப முதலியார் | 53 |
| அமங்கிலிகள் | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 121 |
| அரசன் ஆணை | ... நல். கண்ணப்ப முதலியார் | 24 |
| ஹரதத்தர் மகிமை | ... ,, | 85 |
| அவனன்றி ஓரணுவும் அசையாது | ... ,, | 117 |
| ஆலயவழிபாடு | ... நாகாசல ஆலயநேசன் | 19 |
| இந்துமதக் கொள்கைகளும் சுகாதாரங்களும் | அ. முத்தைய பிள்ளை | 125, 226 |
| இப்படிக் கிடப்பவள் எப்படிப் பெறுவாள்? | மெ. குப்புசாமி பிள்ளை | 119 |
| இரங்கற் பாக்கள் | ...வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியார் | 43 |
| இறைவனருளியஇருபெருநூல்கள் | ... பத்திராசிரியர் | 189 |
| உபமன்னியு முனிவர் | ... ச. குமாரஸ்வாமிக் குருக்கள் | 105 |
| உலகிற் சிறந்தது எது? | ... இ. கோவிந்தசாமி பிள்ளை | 193, 217 |
| உறையூர் எணிச்சேரி முடமோசியார் | சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் | 122 |
| எடுத்துக்காட்டின் இயல்பு | ... தெய்வசிகாமணி | 233 |
| ஏகாதசி விரதம் சைவர்களுக்கும் உரியதே | வை. ச. இரா்மலிங்கமுதலியார் | 203 |
| ஏற்றமுறும் வழிகள் | ... பத்திராதிபர் | 41 |
| 'ஐயர்' என்னும் சொல்வழக்கு | ... ஒரு மாணுக்கன் | 156 |
| ஐய வினு | ... சித்தாந்தங் கற்போன் | ,, |
| ஐயோ! பாவம்! | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 107 |
| ஓர் வினு | ... லோ. கு. நடராஜசெட்டி | 34 |

| | | |
|---|---|---|
| கங்கை நீரின் தூய்மை | ... டாக்ட்டர் நெல்சன் | 263 |
| கடவுளும் காந்தியும் | ... ஒரு சைவன் | 160 |
| கடை எழு வள்ளல்கள் | ... சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் | 102 |
| கணபதியல்லதோர் கருமமில்லையே | ... அ. முத்தையபிள்ளை | 223 |
| கரும சண்டாளர், | ... உண்மைச் சைவன் | 178 |
| கற்பக விருக்ஷம் | ... 'ஞானசித்தி' | 266 |
| கனவு மெய்யே | ... நல். கண்ணப்ப முதலியார் | 152 |
| காந்திக்குச் சம்பந்தம் உண்டா? | ... குடந்தை காந்தி பஹிஷ்காரக் கமிட்டியார் | 170 |
| காந்திக்குப் பணம் எதற்கு? | ... ,, | 167 |
| காந்தியும் கணக்கப்பிள்ளையும் | ... 'பாரதமித்திரன்' | 183 |
| காந்தியின் கபடநாடகத் தன்மை | ... ,, | 185 |
| காந்தியே! ஏமாறவேண்டாம் | ... குடந்தை 'காந்திபஹிஷ்காரக் கமிட்டியார் | 172 |
| கிருஷ்ண பலராமர் எவற்றின் அவதாரங்கள்? | தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 96 |
| கிருஷ்ணார்ச்சுனரது கயிலாசயாத்திரை | ,, | 76 |
| கேதார விரதம் | ... வே. நாராயண கனபாடிகள் | 32 |
| கொலையுமா தெய்வவணக்கம்? | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 87 |
| சகல சாஸ்திர சம்மதம் | ... பத்திராசிரியர் | 241 |
| சண்டேசுவரர்வேறு; சண்டேசுவர நாயனார் வேறு | பொ. முத்தைய பிள்ளை | 104 |
| ஜப்பான்தேசத்துப் பத்து அறவுரைகள் | பத்திரிகைக்கொய்வு | 232 |
| சரித்திரபுராணங்கள் | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 45 |
| சற்குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை | "சித்தாந்தம்" | 255 |
| சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் வினாவுக்கு விடை | சிவசூரியநாராயணபிள்ளை | 206 |
| சிவகங்கை வர்ணாச்சிரம சுயராச்சிய சங்கம் | எம். ஜி. குருசாமி ஐயர் | 249 |
| சிவஞான சுவாமிகள் திருவுள்ளம் | ... பொ. முத்தைய பிள்ளை | 179 |
| சிவத்தியானத்திலுள்ள துவாத்திரிம்சத்(32)இலட்சணங்கள் | ச. பொன்னுசாமிக்குருக்கள் | 247 |
| சிவத்தினியல்பு | ,, | 13, 35, 64 |


186942




| | | |
|---|---|---|
| "சிவநேசன்" அறிவிப்பு | ... அமைச்சர் | 20 |
| ,, | ... பத்திராதிபர் | 160 |
| சிவநேசனுக்கு மூலதனம் உதவிய திருவாளர்கள் | ,, | 211 |
| சிவநேசனுக்கு வாழ்த்தும்மதிப்புரையும் | | 14, 112, 116, 160, 211, 272 |
| சிவபஞ்சாக்கரம் ஜெபித்தலின் பலன் | அ. முத்தைய பிள்ளை | 60 |
| சிவபராக்ரமம் | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 286 |
| சிவபெருமான்எண்குணமுடையவர் | .. ச. குமாரஸ்வாமிக் குருக்கள் | 29 |
| சிவபெருமான் குணாதீதர் | ... ,, | 134 |
| சிவபேதங்களும் பதிபேதங்களும் | ... ,, | 151 |
| சிவமகத்வம் | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 93 |
| சிவமகிமை | ... ,, | 74 |
| சிவவழிபாடு | ... ச. பொன்னுசாமிக்குருக்கள், | 68, 108 |
| சிவலிங்க மகத்துவம் | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 245 |
| சிவோத்கர்ஷம் | ... ,, | 48, 154 |
| சிவோபாசனை | ... ,, | 165 |
| சீதையின் வரலாறு | ... நல். கண்ணப்ப முதலியார் | 136 |
| சுக்கிரன் சிவபூசை செய்த வரலாறு | ... திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கத்தார் | 33 |
| சுமித்திர சண்டேசுவரர் | ... ச. குமாரஸ்வாமிக் குருக்கள் | 92 |
| சுவாமிநாத பண்டிதரவர்கள்மீது சாமகவி | பொ. முத்தைய பிள்ளை | 179 |
| செட்டியார்களின் செல்வாக்கு | ... பத்திராதிபர் | 273 |
| செந்தமிழ்ச்சைவத்திருத்தொண்டர் | ... ,, | 159 |
| செவிலி ஈங்தொடு வினாயது | ... சித. நாராயணசாமி சுவாமி | 173 |
| சென்னை மாகாணத் தமிழர் மாநாடு | ... பத்திராசிரியர் | 164 |
| சைவச் சுமங்கலைகளும் தெய்வத் திருநீறும் | க. ராஜமாணிக்கப்பிள்ளை | 73 |
| சைவசமய உண்மைகள் | ... பத்திரிகைக் கொய்வு | 288 |
| சைவத்திருமுறையும் அதனை ஓதுந் தன்மையும் | அ. முத்தைய பிள்ளை | 199 |
| சோமவார விரதம் | ... ,, | 81 |
| சோழன் கரிகாலன் | ... ச. குமாரஸ்வாமிக் குருக்கள் | 120 |
| தமிழ்க் கல்வி | ... உ. வே. சாமிநாதையர் | 7 |
| தமிழ் நூல்களின் தகைமை | ... பத்திராசிரியர் | 161 |

தமிழ்மொழியின் தனிமைத்தன்மை... ,, 166
தமிழன்பர் மகாநாட்டின் முடிவு ... ,, 113
தமிழன்பர் மகாநாடு ... ,, 65
ஷை ஷை விரிவுரைகள் ... சேதுசமஸ்தானம் கனம் ராஜா ஷண்முக ராஜேஸ்வர சேதுபதியவர்கள் & ஆனரபிள்டாக்டர் ராஜா ஸர் அண்ணுமலைச் செட்டியார் 128
ஷை ஷை ஷை ... மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் 145
தலைமைப் பேருரை ... ,, 250
தன்சரிதம்உணர்த்தும் தம்பிரான் ரோழர் } ச. தண்டபாணிதேசிகர் 277
தாயிற்சிறந்த தயாவான தத்துவன்... அ. முத்தையபிள்ளை 259
தாலி ... க. ராஜமாணிக்கப் பிள்ளை 101
தாலியறுத்த கலியாணம் ... ,, 106
திருக்கடைக் காப்பு ... நல். கண்ணப்ப முதலியார் 6
திருக்கோயிலதிகாரிகள் ... அர்த்தநாரீஸ்வரக் குருக்கள் 4
திருவாதிரைத் திருநாள் மகிமை ... நல். கண்ணப்பமுதலியார் 97
திருச்சக்கரப்பள்ளிசிவாலயநிலைமை... எ. ஐராவதம் பிள்ளை 264
தில்லைத்திருவாயிரம்: திருப்புகழ் ... ஸ்ரீமத் தண்டபாணிசுவாமிகள் 296
தீர்மானங்கள் ... பத்திரிகைக் கொய்வு 181
தெய்வச்செந்தமிழிலும் திருத்தமா?... பத்திராசிரியர் 137
தையல் சொற் கேளேல் ... அ. க. பொன்னுசாமி முதலியார் 59
நன்கொடை ... பத்திராதிபர் 244
நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்களுக்கு ஓர் வேண்டுகோள் } வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியார் 230
நாடாளரசரின்நாட்டுமொழிப்பற்று... பத்திரிகைக் கொய்வு 92
நாணற் புல்லின் நன்மை ... டி. வீ. தர்மராஜ கனபாடிகள் 268
நூல்கள் வரவு ....பத்திராசிரியர் 244
நூல்கள் வெளியீடு ... ,, 3
பத்தினிக் கடவுள் ... சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் 9, 25, 69
பலவான்குடி மணிவாசகசங்கத்திரு விழா } பத்திராதிபர் 36
பாண்டித்துரை ... சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் 157
பாலை நெய்தல் பாடியது ... பத்திராசிரியர் 213



பிரதோஷ புண்ணியகாலம் ... 'இந்து சாதனம்' 248
புலவர் புகழ் ... உ. வே. சாமிநாதையர் 254
பொங்கற் பண்டிகை ... அ. முத்தைய பிள்ளை 109
பொருடனைப் போற்றிவாழ் ... பத்திராதிபர் 1
பொன்னேரிச் சந்திப்பு விழா ... தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார் 56
மகாசிவராத்திரி ... சாம்பமூர்த்தி சிவாசாரியார் 158
மங்கையர்க்கரசியார்அன்பின்மாண்பு.. வை. ச. இராமலிங்கமுதலியார் 197
மதிப்புரை மஞ்சரி ... பத்திராசிரியர் 3, 40, 110, 186, 238, 270, 297
முக்கிய வினு ... ஒரு அன்பர் 202
முட்டை ... மெ. குப்புசாமி பிள்ளை 96
முதற்கடவுள் முக்கண்ணனே ... சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் 207
யதார்த்தவாதி வெகுஜனவிரோதி ... பத்திரிகைக் கொய்வு 294
ருத்ரர் என் மயானத்தில்வசிக்கிறார்?...தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் 79
ருத்ரன் தாமஸ தேவதையா? ... ,, 21
வாழ்நாள் வழியடைத்தல் ... வ. மு. இரத்திநேசுவரையர் 8
விஷபானம் ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் 287
விடுதல் பற்றுதல் ... பத்திராதிபர் 17
விடை ... தி. எ. சதாசிவம் 92
விநய விண்ணப்பம் ... பத்திராதிபர் 89
வினு ... விடை விரும்பி 135

☞ மறைத் திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர்: உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூதனமாக எழுதிய குறிப்புரை ஆராய்ச்சிக்குறிப்பு முதலியவற்றுடன் வெளியிட்டுவந்த "திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா" என்னும் நூலும், திருநெல்வேலிப்பேட்டை சைவத்திருவாளர் ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளை அவர்கள் பதவுரை கருத்துரைகள் எழுதி வெளியிட்டுவந்த "இருபா இருபஃது" என்னும் சைவ சித்தாந்த சாஸ்திரமும் இவ்வாண்டில் முடிவுற்றன.

"பழமலைக்கோவை" என்னும் பழமையான நூல் ஷைஐயரவர்களின் குறிப்புரை முதலியவற்றுடன் 72 பக்கங்கள் (9 பாரங்கள்) வெளிவந்துள்ளன.

## சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும்
# வரைந்தனுப்பிய திருவாளர்கள்.

1. சி. மு. சின்னத்தம்பிப் பிள்ளை, வண்கிழக்கு, யாழ்ப்பாணம்.
2. கே. பி. சுப்பிரமணிய சிவாசாரியார், கொ. இலக்குமிபுரம்.
3. வ. மு. இரத்தினேசுவரையர், ஆசிரியர், விவேகானந்தர் கல்விக்கழகம், ஆவினிப்பட்டி.
4. சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார், கோநகர்.
5. வை. சு. இராமலிங்கமுதலியார், தென்னாற்காடு ஜில்லா எஜிகேஷன் கௌன்ஸில்மெம்பர் & திருக்கோவலூர் தாலூகா போர்டு மெம்பர், கண்டாச்சிபுரம்.
6. லோ. கு. நடராஜ செட்டியார், மண்டி, வேலூர்.
7. ஆனந்த கானசபையார், கரிசூழ்ந்தமங்கலம்.
8. கா. மு. கிருஷ்ணசுவாமிக் குருக்கள், வைத்தீஸ்வரன்கோவில்.
9. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம்.
10. அ. க. பொன்னுசாமி முதலியார், சைவபுராணிகர், ஐயங்கார்குளம், காஞ்சீபுரம்.
11. எ. முத்தைய பிள்ளை, கண்டாச்சிபுரம் (தென்னாற்காடு ஜில்லா)
12. ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
13. ப. ராம. சுப. சுப்பிரமணியன் செட்டியார், தென்னூர் (திருச்சிராப்பள்ளி)
14. தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார், சிவபரத்துவ நிரூபணசிகாமணி, பொன்னேரி.
15. மு. முத்துப்பிள்ளை, வித்துவான், பரிமணங்குடி.
16. தி. மு. செந்திநயகம் பிள்ளை, கௌமாரமடாலயம், திருவாமாத்தூர்.
17. எஸ். சந்தான கோபாலையர், தலைமையாசிரியர், போர்டுஇந்து உயர்தர ஆண்பாடசாலை, கண்டாச்சிபுரம்.
18. சிவசூரிய நாராயணபிள்ளை, பஞ்சாங்கக்கணிதர், இட்டமொழி, திருநெல்வேலி.
19. சபாபதி சுப்பிரமணியன், காரியதரிசி, தெய்வீகன் இலவச வாசகசாலை, ஆண்டான் கோவில்.
20. ராம. உ. ராம. இராமசாமி செட்டியார், காரைக்குடி.

---



சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.
## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.
பலவான்குடி.

| ஆண்டு அ | பவ—ஆவணி: 1934—ஆகஸ்ட் | திங்கள் க. |
|---|---|---|

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## சிவநேசன்.

சிவம் என்பது மங்கலப் பொருளாகும். தெய்வ மங்கலப் பொருளாகிய சிவத்தை நேசித்தலாலேயே நித்தியமாகிய இன்பத்தை அநுபவித்தற்கு ஏதுவாகும். இவ் வுண்மையை மக்கள் நினைவு கூர்ந்து நித்தியமாகிய திருவருளின்பத்தைப் பெற்று வாழவேண்டுமென்ற முழுநோக்கத்துடன் 'சிவநேசன்' என்னும் சீரிய பெயர் தாங்கி மங்கலம்பரப்பும் இத்திங்கட்டாள் உரியதொண்டாற்றி வருகின்றது. உயிர்க்குயிராய் விளங்கும் பேரிறைவராகிய சிவபரம் பொருளை—ஆன்ம நாயகனை—உலக முதல்வனை—உலகாதீதனை—சராசரங்கட்கெல்லாம் தாய்தந்தையாக விளங்குந் தனிமுதலை ஆன்மநாயகர் எனத் தெளிந்து, அவர்மாட்டு நீங்காத நேசங்கொண்டு, அன்புமுதிர்ச்சியால் இன்பவாழ்வு பெறவிரும்பும் எவரும் சிவநேசர்களே யாவார்கள். சிவனை மறவாத சிந்தையர்க்குச் சிவபெருமான் உறுதுணையாய் நின்று இகபரசாதனங்களை அருளுகின்றாராதலின், அவர் விதித்த வேதாகமாதி கலைகளும், அவற்றின் வழிநூல் சார்புநூல்களும், அவரது வியாபகத் தன்மையையும், ஆன்மாக்களின் வியாப்பியத் தன்மையையும், அவரே ஆளுடையார் என்பதையும், நாம் அவர்க்கு ஆளானவர்கள் என்பதையும் உணர்த்துகின்றனவாதலின், அவர் அருளிச்செய்த ஆரியம் தமிழ் எனும் இருபெரும் மொழிகளையும் இருகண்களாகப் பாவித்து அவைகளைப் போற்றி அவ்வருள்மொழிகளின் உண்மை தெளிந்து, தேவதேவனை—மகா

தேவனாய் விளங்கும் சிவபெருமானை—செம்பொனம்பலவனை மனதார நேசித்து, வாயார வாழ்த்தி, மெய்வழிபாடு செய்து, ஆன்மகோடிகளாகிய நாமெல்லாம் சிவநேசச் செல்வர்களாகச் சிவம்பெருக்கி வாழ்வோமாக.

சிவம் பெருக்கும் நம் சிவநேசனுக்கு இஃது எட்டாவதாண்டின் முதற்றிங்களாகும். எழுதொணா மறைக்கும் எட்டொணா வடிவத் தெம்பிரான் திருவருளால் சிவநேசன் சிறந்து வளர்ந்து சிவத்தொண்டு—செந்தமிழ்த்தொண்டுகள் புரிந்து செழித்தோங்க வேண்டுவோமாக.

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் உயிர்த்துணையே.

---

# சிவநேசனுக்கு வாழ்த்து.

(ஜலகண்டபுரம் ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சையபிள்ளையவர்கள்.)

தன்னேரி லாதசைவ சித்தாந்த வரும்பொருளைச்
 சமர சத்தான்
முன்னோ ருணர்த்திவருஞ் சிவநேசன் வாழ்கவென்று
 முயற்சி யாலே
பன்னா ளுமுணர்ந்துகொண்ட நுண்பொருளெலாம்பிறர்க்கு
 பகரிக் கின்ற
மன்னுகும் இராமசா மிக்குரிசி லிசைமலிய
 வாழ்க மாதோ.

(கண்டாச்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள்.)

1. திருக்கிளருங் கைலைமலை யிறைவன் றோழன்
 திருநாவ லூராளி யென்று முன்னோர்
பெருக்குமறை முதலனந்த நூல்க டம்மிற்
 பேசியிருப் பதுவன்றிக் கண்டே மில்லை
கருக்கிளரும் புவியில்சிவ நெறிவ ளர்க்குங்
 காரணத்தாற் சிவநேச னென்னு நாம
வுருக்கிளரும் புத்தகமாம் வடிவ முற்றோய்!
 உனைக்கண்டோம் கண்களிக்க வாழி! வாழி!!

2. அலகில்சிவ நெறிவளர்க்குந் தன்மை யானும்
 அரனடியே மெய்ப்பொருளென் றறைத லானும்



நிலவுமவ னைத்தெழுத்தே பிறவி வேலை
 நீந்துதற்காந் தோணியென நிகழ்த்த லானும்
மலவழுக்கைக் கழுவுபெருந் துறையே சைவ
 மார்க்கமென வுலகோர்க்கி னுணர்த்த லானும்
தலமதிக்குஞ் சிவநேச னென்னும் நாமஞ்
 சாற்றறகுஞ் சிறப்பினொடு வாழி! வாழி!!

3. ஆண்டேழா யுலகமதி னிலவி நாளு
 மறிஞர்பல ரிடஞ்சென்று தமிழ்ம ணக்குங்
காண்டகுகட் டுரைகள்பழ மொழிக ணீதிக்
 கதையான்றோர் செய்முதுநூல் பலவுந் தாங்கி
மாண்பினுடன் முதற்றிங்கள் மாதந் தோறும்
 வருநினக்கிவ் வாண்டெட்டாம் வயது தன்னில்
வேண்டியசீர் பலவளங்க டிருவு மோங்கி
 விளங்கிடநங் குகனருள்வன் வாழி! வாழி!!

(வலங்கைமான், ஆண்டான்கோவில், தெய்வீக மலையமன்னர் சங்கக் காரியதரிசி, திரு. P. S. சுப்பிரமணிய உடையார் அவர்கள்.)

சைவமார் கடவுளின் றண்ணரு ளாலே
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்கத்
தமிழருஞ் சைவருந் தகுவன புரிந்தார்;
தாட்களும் மல்கின; சபைகளும் பல்கின;
வடமொழி யாளரும் வண்டமிழ்த் தீஞ்சுவைக்
கடலின் மாண்பைக் கண்டன ரீங்கே;
ஆங்கிலத் துறையின் ஆழ்ந்தமே லவரும்
நீங்கா தணைய நேர்ந்தன ரிந்நாள்;
புலவரு முயன்றார்; பொலிந்தன நூல்கள்;
பலமது கொண்டார் பாரிகழ் மாந்தர்;
ஆங்கவர்க் காவன அன்றுதொட் டின்றும்
பாங்குறச் செய்த பண்பின் ஓங்கி
வளர்சிவ நேசன் வாழ்கஇவ் வாண்டும்
வருகசித் தாந்த வளவரு மோங்கவே!

[கண்டாச்சிபுரம் திரு. அ. முத்தைய பிள்ளை யவர்கள்.]

வெண்பா

நாத்திகமா மாசகல நல்ராம சாமியவன்
எத்தினனோர் தீபமஃ தேதென்னிற்—சாத்திரமுந்
தண்டமிழுங் கொண்டுலகிற் றங்குசிவ நேசனே
எண்டிசைக்குஞ் செல்வ னிவன்.

## ஆசிரியப்பா.

பூமகள் கொழுநன் புரந்தரன் மா சி
லாமறை யவனும் வானவர் மாத வ
முனிவரர் பரவுந் தனிமுதற் சிவ னே
நனிபரம் பொருளென நவில்சிவ நே ச
சீர்தன வணிக மரபிற் கொருவ ன்
பேர்மிகும் 'இராம சாமி'ப் பெரிய நீ
டுழிவாழ்ந் திடுஞ்சிவ நேச னுன்றை டு
பாழிலா தோங்குசெந் தமிழ்ப்பயிர் வளர்ச் சி
யுறுவதற் கேற்ற தொருபணி யாற் ற
லுறுநினக் குக்கைம் மாறதொன் றின்றெனப்
பின்னுமிங் கெமக்குப் பெருகிய வன் பு
மன்னிடச் செய்யெட் டாம்வரு டத்தி ற்
பலவளம் படைத்து நிலவிநூல் கற் றோ
ருலகவர் மதிக்குநல் லுரைகவி வியாச ங்
கொண்டுபல் லாண்டு குலவு க
தண்டமிழ் நேசன் சைவம்வா ழிய வே!

(அண்ணுமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பண்டிதமணி திரு. மு. கதிரேசச்செட்டியார் அவர்கள்)

'சிவநேசன்' வந்து மகிழ்வூட்டியது. பல்லாற்றானும் சிவநேசன் சிறந்து விளங்குதலை யறிந்து இன்புறுகின்றேன்.

---

## நூல் வெளியீடு.

### (தேவிகாலோத்தர ஆகமம்)

சிவபெருமான் சத்திநிபாதத் தீத்தம ஆன்மவர்க்கம் உய்யும் பொருட்டு ஞானத்தையும் ஞானசாரத்தையும் உமாதேவியார்க்கு உபதேசித்தருளியது. இதன் தமிழ்மூலமும், அதற்குத் தேவகோட்டைச் சிவாகமசங்கத்துச் சித்தாந்த போதகாசிரியர் திரு. பொ. முத்தையபிள்ளை யவர்கள் எழுதிய பதவுரை பொழிப்புரை கருத்துரை விசேடவுரை யடங்கிய 'சித்தாந்தாத்நவிருத்தி' என்னும் சிறந்த உரையும், இத் திங்கள் முதல் நமது சிவநேசனுடன் இணைந்துவருகின்றன. திரு. பிள்ளையவர்களின் சைவசித்தாந்த ஆராய்ச்சித் திறனையும், உரை உரைக்கும் திட்ப நுட்பத்தையும், அவர்கள் எழுதிவெளியிட்டிருக்கும் சிவஞான போதச் சிற்றுரை விளக்கம், சிவஞான சித்தியாரின் பொழிப்புரை முதலியன நன்குதெரிக்கும். இவ்வரிய ஆகம நூற்பொருள் சைவவுலகுக்கும் தமிழுலகுக்கும் பயன்படும் வண்ணம் உதவிய அவர்கட்கு மிகவும் நன்றி கூறுகின்றோம்.

(ப—ர்)

# சிவாதிக்யம்.

## (ஸ்ரீ உபமந்யு மகரிஷி செய்த பிரசங்கம்)

[ஸ்ரீ உபய வே. தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள் மொழிபெயர்த்த அநுசாஸனபர்வத்து * 47-வது அத்தியாயத்திரட்டு.]

உபமந்யு சொல்லலானார்:—'ஐயா! க்ருதயுகத்தில் தண்டி என்றுபெயர்பெற்ற ஒரு ரிஷி யிருந்தார். அவர் பதினாயிரம் வருஷகாலம் பக்தியோடு தியானம் செய்து சிவனை ஆராதித்தார். அதன் பலனைக்கேளும். அவர் பிரபுவான மகாதேவரைப் பார்த்து ஸ்தோத்திரங்களைச் சொன்னார். தண்டியானவர் அழிவில்லாதவரும் மகாத்மாவுமான பரமாத்மாவைத் தவவன்மையினால் தியானஞ்செய்து மிக்க ஆச்சரியத்துடன் சாங்கிய சாஸ்திரிகள் எவரை மூலப்பிரகிருதியென்று சொல்லுகின்றனரோ, யோகிகள் எவரைப் பிரகிருதியை நடத்தும் புருஷராகிய ஈஸ்வரர் என்று தியானிக்கின்றனரோ, படைத்தற்கும் அழித்தற்கும் எவர் காரணமென்று வித்வான்கள் அறிகின்றனரோ, தேவர்களிலும் அசுரர்களிலும் முனிவர்களிலும் எவருக்கு மேற்பட்டவரில்லையோ, ஜனனமில்லாதவரும் எல்லாவற்றையும் நடத்துகிறவரும் முதலும் கடையுமற்றவரும் சக்தியுள்ளவரும் எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ஆனந்த முள்ளவரும் குற்றமற்றவருமான அந்தப்பகவானைச் சரணமடைகிறேன்.' என்று சொன்னார். இவ்வாறு சொல்லிக்கொண் டிருக்கும்போதே உவமையில்லாதவரும் சிந்தைக்கெட்டாதவரும் என்றுமிருப்பவரும் மாறாதவரும் பகுதியற்றவரும் பூர்ணரும் நிர்க்குணரும் மனத்தூய்மை யற்றவர்கள் அடைவதற்கு முடியாதவரும் பிரகிருதிக்குமேலான ஆத்மாவுக்கும் மேற்பட்டவரும் ஜீவனது ஒளியும் பரப்ரம்மமுமான ஈஸ்வரரைப் பார்க்கவிரும்பித் தண்டிமுனிவர் அநேகவருஷங்கள் உக்கிரமான தவத்திலிருந்து ஈசுவரரைக் கண்ட பிறகு துதிக்கலானார்:— 'சிறந்தவரே! நீர் சுத்தங்களையும் சுத்தம் செய்பவர்; நல்ல கதியைத் தருகிறவர்களுக்கும் கதியாயிருப்பவர்; ஒளிகளுக்கும் மேலான ஒளி; தவங்களுக்கும் சிறந்த தவமாயிருப்பவர். அதிக மங்களங்களைக் கொடுப்பவரே! பிரபுவே! நீர்தான் மேலான சத்யம். உமக்கு நமஸ்காரம். ப்ரபுவே! ஜனன மரணங்களுக்குப் பயந்து தவத்தில் முயலுகின்ற யதிகளுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவரே! சுகத்துக்காதாரமாயிருப்பவரே! உமக்கு நமஸ்காரம். ப்ரம்மா இந்திரன் விஷ்ணு விசுவேதேவர்கள் மஹரிஷிகள் (யாரும்) உம்மைச் சரியாகவறியவில்லை; நாங்கள் அறிவது எப்படி? பூர்வவிருத்தாந்தங்கள் தெரிந்த தேவரிஷிகள் உமக்கு மூன்று மூர்த்திகள் இருப்பதாகச் சொல்லு

---

* சென்னை: கமர்ஷியல் பிரஸ், 1923-ஆம் வருஷப் பதிப்பு.

கின்றனர். ஞானிகள் உம்மை அறிந்த பிறகு துயரமற்ற உயர்ந்த ஸ்வரூபத்தை அடைகின்றனர். ப்ரபுவே! நீர் நினையாதவரையில் ஜனன மரணங்கள் அநேக முண்டு. ஸ்வர்க்கத்திற்கும் மோக்ஷத்திற்கும் மார்க்கங்களை எடுப்பவரும் கொடுப்பவரும் நீர். மேலும் நீர்தாம். கீழும் நீர்தாம். ப்ரம்மா, விஷ்ணு, சிவன், ஸ்கந்தன், இந்திரன், சூரியன், யமன், வருணன், சந்திரன், மனு, தாதா, விதாதா, குபேரன் இவர்களும் நீரே. பூமி, வாயு, ஜலம், அக்னி, ஆகாயம், வாக்கு, புத்தி, இருப்பு, நினைப்பு, செய்கை, பொய், மெய், உண்மை, இன்மை இவையும் நீரே. பரப்ரம்மமும் சர்ங்கியர்களும் யோகர்களும் அடையும் பரகதியும் நீர்தாம். இப்போது நாங்கள் கிருதார்த்தாளானோம். ஆ! ஆ! இவ்வளவு நீண்டகாலம் அறிவில்லாமல் மயங்கியிருந்தோம். நித்யரான எந்தச் சிறந்த தேவரை வித்வான்களறிகின்றனரோ அவரை நாம் அறியாமலிருந்தோம். நான் இவ்வளவு ஜன்மங்களுக்குப்பின் நேரே உம்மிடத்தில் பக்தியைப் பெற்றேன். எவரை யறிந்தபின் மோக்ஷம் பெறலாமோ அந்தப் பகவான் பக்தியுள்ளவர்களுக்குத் தான் அனுக்கிரகம் செய்கிறவர். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் முனிவர்களுக்கும் தெரியாமல் குகையில் வைக்கப்பட்டதும் வேதத்தால் அறியக்கூடாததுமான பரப்ரம்மம் எதுவோ அஃது இந்தப் பகவானான ஈசுவரர்தாம். இவர் எல்லாவற்றையும் படைத்தவர்; எங்கும் முகங்களுள்ளவர்; எல்லாவற்றிற்கும் ஆத்மா; எல்லாவற்றையும் பார்ப்பவர், எல்லாவற்றிலுமிருப்பவர்; எல்லாவற்றையும் அறிகிறவர்; எல்லாவற்றையும் தமக்குத் தேகமாகவுடையவர். திரும்பவும் ஜனியாமலிருக்க விரும்புகிறவர்களுக்குத் தஞ்சமா யிருப்பவர் ஈசுவரரே. உலகங்களையும் தேவர்களையும் படைத்து அவர்களை எட்டுச்சரீரங்களினால் தாங்கிக்காப்பாற்றுகிறார். இவர் ஒருவரே என்று மிருப்பவர். சாதுக்களுக்கும் பரம்பொரு ளிவரே. முக்திபெற்றவர்களுக்கு மோக்ஷமிவரே. ஆத்மாவை யறிந்தவர்களுக்குக் கைவல்யம் இவரே. இந்தப் பிரபுவானவர் தேவருக்கும் அசுரருக்கும் மனிதருக்கும் தெரியாமலிருக்கவேண்டுமென்றே ப்ரம்மா முதலான ஞானிகளால் ரகசியமாக மறைத்துவைக்கப்பட்டிருக்கிறார். ஆதலால், தேவர்களும் அசுரர்களும் மனிதர்களும்மனத்திற்குள்மறைந்திருக்கும் இந்தப்பிரபுவினாலேயே மயங்கச்செய்யப்பட்டவர்களாய் இவருடைய உண்மையை அறியாமலிருக்கின்றனர். எவர்கள் பக்தி யோகத்தினால் மனத் தூய்மையை யடைந்து இவரைச்சரணமடைகின்றனரோ அவர்களுக்குமட்டுமே உள்ளத்திலிருப்பவராகிய இவர் தம்மைக் காண்பிக்கிறார். எவரை யறிந்த பின் ஜனனமரணங்கள் இராவோ, அறியத்தக்கவற்றுள் முதன்மையான எவரையறிந்தபின் அறியவேண்டியதொன்றுமில்லையோ, ஞானியானவன் எந்தச்சிறந்தபதத்தை யடைந்தபின் அதற்கு மேலாக எதையும் நினைப்பதில்லையோ, எவரை மாறுதலும்



கெடுதலும் இல்லாததும் அறிவுக்கெட்டாததுமான பரகதியென்று அடைகின்றனரோ, சத்வ ரஜஸ் தமோ குணங்களின் ஸ்வரூபங்களை யறிந்தவரும் ஆத்மஞானத்தில் நிபுணரும் மிக்க ஸூக்ஷ்ம ஞானமுள்ளவர்களுமாகிய சாங்கியர்கள் எந்த ஸூக்ஷ்மத்தை யறிந்து சம்சாரத்தினின்று விடுபடுகின்றனரோ, வேதமறிந்தவர்கள் பிராணாயாமம் செய்துகொண்டு வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் அறியவேண்டிய பொருளாகிய எவரைஎக்காலமும் தியானித்துக்கொண்டும் ஜபித்துக்கொண்டு மிருக்கின்றனரோ அந்தமகேசுவரரை ஓங்காரமென்னும் ரதத்திலேறிக் கொண்டு ஞானிகள் சேருகின்றனர். தேவயானமென்று சொல்லப்படும் அர்ச்சிராதி மார்க்கத்தின்வாயிலாகிய ஆதித்தியன் என்று சொல்லப்படுகிறவர் இவர். பித்ருயானம் என்று சொல்லப்படுகிற தூமாதிமார்க்கத்திற்கு வாயிலாகிய சந்திரன் என்று சொல்லப்படுகிறவரும் இவரே. ப்ரம்மதேவர் முற்காலத்தில் நீலலோகிதர் என்று பெயருள்ள இவரைப் பல்வகை ஸ்தோத்திரங்களினால் ஆராதித்துப் புத்ர வரங் கேட்டார். ரிக்வேதிகள் எவரைப் பரதத்வமாகக் கூறுகின்றனரோ, யஜுர்வேதிகள் எவரிடத்தில் ஹோமம் செய்கின்றனரோ, சாமவேதிகள் எவரைப் பாடுகின்றனரோ, அதர்வண வேதிகளான பிராம்மணர்கள் எவரைத்துதிக்கின்றனரோ அந்த இவர்தாம் யாகத்திற்கு முதற்காரணமென்றும் முதன்மையான தேவதை யென்றும் நினைக்கப்படுகிறார். எட்டுப் பிரகிருதிகள் பிரகிருதிகளுக்கு மேற்பட்ட ஈசுவரன் இவையெல்லாம் பரமசிவனுடைய பாகமாகவே நடந்துகொண்டிருக்கின்றன. நிச்யமும் எல்லாவற்றிற்கும் மேற்பட்டது மாகிய ஆனந்தமும் இவர்தாம். பற்றற்றவர்கள் அடையும் கதியும் சாதுக்கள் தியானிக்கும் மேலான பொருளும் இவர்தாம். இவர்தாம் அச்சமற்ற இடம். இவர்தாம் அழிவில்லாத பரப்ரம்மம். சாஸ்திரங்களையும் வேதங்களையும் வேதாங்கங்களையும் அறிந்தவருக்கு இவரைத் தியானிப்பதுதான் சிறந்த உபாயம். முடிவான இடம் இவர்தாம். முடிவான ஞானம் இவர்தாம். முடிவான தவப்பயன் இவர்தாம். முடிவான நல்வழிஇவர்தாம். மேலான இந்திரிய ஜயமும் இவர்தாம். மேலான ஆனந்தம் இவர்தாம். யோகிகள் இவரையடைந்த பிறகு ஆகவேண்டியதொன்று மில்லை யென்று நினைக்கின்றனர். இவரே சந்தோஷம். இவரே ஜபம். இவரேவேதம். இவரே தர்மசாஸ்திரம். அன்புள்ளவர்களின் ஆத்மா சேருமிடமும் வித்வான்களுக்கு அழியாத பயனும் இவர்தாம். யஜமானர்களுக்கும் நீர்தாம் கதி. சுவாமி! தவம்புரிவோரின் முக்கியமான கதியும் நீரே. என்று மழியாதவரே! கர்மசந்யாசம் செய்தவர்கள் அடையும் கதியும் நீரே. மோக்ஷகதியும் நீரே. சுவாமி! நாம ரூபங்களில்லாததும் குற்றமில்லாததுமாகிய கைவல்யம் என்னும் சிறந்தகதியும் நீரே.' என்று தண்டி மஹாமுனிவர் முன்னர் ப்ரம்மதேவர் எந்தப்பரப்ரம்மத்தைத் துதித்

தாரோ அந்தப் பரப்ரம்ம மாகிய ஈசுவரரை மனமாரத் துதித்தார். ப்ரம்மஞானியான தண்டியினால் இவ்வாறு துதிக்கப் பெற்றவரும் உமையோடு கூடியவரும் பிரபுவும் மங்களகாருமான மகாதேவர், 'ப்ரம்மாவும் இந்திரனும் விஷ்ணுவும் விசுவேதேவர்களும் மஹரிஷிகளும் உம்மையறியார்கள்' என்று சொன்னதனால் சந்தோஷமடைந்து தண்டிமுனிவரைப்பார்த்து, 'நீ குறையும் குற்றமு மில்லாதவனும் துக்கமில்லாதவனும் புகழும் பிரம்மதேஜஸும் திவ்யஜ்ஞானமுமுள்ளவனுமாவாய். அந்தணரிற் சிறந்தவனே! ரிஷிகளால் ஆசிரயிக்கத்தக்கவனும் சூத்ரம் செய்யத்தக்கவனு மான புத்ரன் என்னுடைய அனுக்கிரகத்தினால் உனக்கு உண்டாவான். சந்தேகமில்லை. இன்னும் என்னவரத்தை உனக்கு இப்போது நான் கொடுப்பேன்? குழந்தாய்! நீ விரும்புவதைச் சொல்.' என்று சொன்னார். அந்தத் தண்டி. முனிவர் கைகூப்பிக்கொண்டு 'உம்மிடத்தில் உறுதியான பக்திதான் எனக்குவேண்டும்' என்று கேட்டார். ஈசுவரர் அந்த முனிவருக்கு மேற்சொன்ன வரங்களையெல்லாம் அளித்துத் தேவரிஷிகளால் நமஸ்கரிக்கப்பட்டவராகவும், தேவர்களால் துதிக்கப்பட்டவராகவும் அவ்விடத்திலேயே அந்தர்த்தானமானார். யாதவசிரேஷ்டரே! பகவானானவர் தம் பரிஜனங்களுடன் அந்தர்த்தானமானபிறகு, தண்டிமுனிவர் இங்கே என்ஆசிரமத்திற்கு வந்து எனக்கு இதைச் சொன்னார்.

தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள்,
பொன்னேரி.

---

# ஆஸ்திகர்களே! அஞ்சாதீர்.

## 'கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்'

(இந்து சாதனத்தில் வைதிகன் எழுதுவது)

இக்காலத்தில், 'தீண்டாமையை ஒழித்தல்', 'சமபந்திபோசனம்' 'ஆலயப்பிரவேசம்' ஆகிய பிரச்சினைகள் கிளம்புகின்றனவே! இதற்கு என்னசெய்யலாம்' என்று ஈஸ்வரனிடத்தில் மெய்யான பக்தியுள்ளவர்கள் அச்சம்கொள்ளக் கூடாது. பின் என்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய்வோம்.

'தீண்டாமையை ஒழிக்கவேண்டும், தீண்டாதாரோடு சமபந்திபோசனம் செய்யவேண்டும், தீண்டாதாரும் பிறரும் ஒரே ஆலயப்பிரவேசம் செய்யவேண்டும்'' என்று சொல்லுபவருடைய நியாயங்கள் யாவை? 'இந்தியமக்கள் யாவரும் ஈஸ்வர சங்கற்பத்தினால் பாரதமாதா பெற்றெடுத்த செல்வக்குழந்தைகளாவர். அதனாலே அவர்களனைவரும் சகோதரத்துவம் பூண்டவர்கள். ஆகவே, அத்தகைய சகோதரர்கள் ஒருவரோடொருவர் தீண்டாது இன்பமனுபவித்



திருத்தல்கூடாது. அவர்கள் ஒருங்கிருந்து அளவளாவாது உண்ணுதல் உவக்காது. அவர்கள் யாவரும் ஒருமித்து ஒரே ஆலயத்திற்பிரவேசியாது வணங்கிவருதல் வழிபாடாகாது' என்பவைகளேயாம்.

இவர்களுடைய நியாயங்களை ஆராய்வதற்குமுன் ஒரு சிறுகதை என் மனத்தில் எழுகிறது. 'நெடுங்காலமாகக் கை கால் முதலிய அவயவங்கள் தம்மோடு சகோதரத்துவம் பூண்ட தலை, முகம், வயிறு முதலிய சிலஉறுப்புக்களின் செயல்களை யவதானித்து வந்தன. ஒருநாள் கையானது பின்வருமாறு நினைக்க ஆரம்பித்தது. 'நாமும் எனக்கு மேற்பட்டவராகிய தலை முகம் என்பவர்களும், கீழ்ப்பட்டவையாகிய வயிறு, கால் என்பவைகளும், எந்தாயாரின் அகட்டில் பத்துமாசமிருந்து பிறந்தவர்களன்றோ? ஆதலால், நாங்கள் யாவரும் எல்லாவிஷயங்களிலும் சம உரிமையுடையவர்களென்பது நிச்சயமே! அப்படியிருக்கத் தலை முகம் என்பவர்கள் தாங்கள் உயர்ந்தவர்களாம். நாம் அவர்களோடு கூடச்சென்று இன்ப மனுபவித்தல் கூடாதாம். ஆனால், எம்முடைய தயவுமட்டும் வேண்டுமாம். இஃதென்ன அநியாயம்! எம் சுயமரியாதையை மீட்டும் பெறுவதற்கு ஒரு வழி திறக்கத்தான் வேண்டும். எம்மாலான முயற்சி செய்வேம்' என்று இன்னபலவாறு சிந்தித்தவண்ணமாய்க் காலிடஞ்சென்றது.

அது காலைப்பார்த்துச் சொன்னதாவது:—'நண்ப! நீயும் நானும், மற்றும் தலை முகம் என்பவர்களும் ஒரே மாதாவின் பிள்ளைகளாயிருக்க, அவர்கள் உன்னைத் தாழ்த்தப்பட்டவன் என்றும், கடைச்சாதியான் என்றும் கூறுகிறார்களே! இவற்றை நீ வாளா கேட்டுக்கொண்டிருக்கின்றனையே! இன்னுந் தூக்கமா? சற்றுஎழுந்திரு, விழித்துப்பார், அவர்களோடு சமத்துவம் பாராட்டவேண்டிய நீ—அவர்களின் குற்றேவல்களை எப்பொழுதும் பணிவோடு செய்துவருகின்ற நீ—அவர்கள் பெறுஞ் சுக நயங்கள் எல்லாவற்றையும் பெறக்கூடாதாம். செல்லுமிடங்களுக்கெல்லாம் போகக்கூடாதாம். இவ்வநர்த்தங்களைக் கண்டு, கேட்டு அனுபவித்த பின்னுமா அவமே காலத்தைப் போக்குகிறாய்? விரைவாகச் சென்று உன் உரிமைகளைப் பெறுதி. என்னாலானமட்டும் துணைநிற்கிறேன்'' என்று பள்ளியெழுச்சி பாடிற்று.

துயில்நீத்து எழுந்த காலானது இவற்றையெல்லாம் சரியேயென்று அறியாமையினாலே தன்மனத்தில் ஆராயாமற் பதித்துக்கொண்டது. சிறிது சிறிதாகத் தனது நண்பன் கூறிய உரிமைகளைப் பெறுவதாகச் சங்கல்பமும் செய்துகொண்டது. மற்றை நாள் தலையானது ஏதோ காரியமாகத் தலைப்பாகை யிட்டதைப்பார்த்தது. உடனே தானும் ஒரு தலைப்பாகையை இட்டுக்கொண்டது. அஃது ஒருவாறாக நைந்து கெட்டுப்போக, அடுத்தநிமிஷம் முகமானது வேறொருமுகத்தை முத்தமிட்டது. இதனைக்கண்ட பாதம்,

தன்னியல்பை மறந்துவிரைவாகத் தானும் அவ்வாறு செய்வதற்கு (முத்தமிடுவதற்கு) மேலேசெல்லத் தொடங்கியது. இயல்புக்கு மாறாய கருமம் பார்த்த காரணத்தால் உடனேயாவும் அதோகதியாய் நிலத்தில்விழுந்து புரண்டன. இதைக்கண்ட கைகள் தாமும் உடன்வீழ்ந்து துன்பமடைந்தன வாயினும், 'விழுந்தவன் மீசையில் மண்படவில்லைதானே' என்றது போலவும், தலை முகம் என்பவர்களைத் தங்கள் தந்திரத்தினால் விழுத்தி விட்டோந்தானே என்ற குதூகலத்தினாலும் ஒன்றோடொன்று தட்டி ஓசையை உண்டாக்கி உவப்பெய்தின. ஆனால், அதே சமயத்தில் தங்களுக்குப் பெரியதொரு கடமையும் பொறுத்திருப்பதை உணர்ந்தன. அஃதாவது: விழுந்தமையால் ஊறடைந்த ஏனைய உறுப்புகளுக்குச் சிகிச்சை செய்வதேயாம். 'விநாசகாலே விபரீதபுத்தி' என்பதுபோல இவ்விடர்ப்பாடுகளுக்கெல்லாம் தம் மனத்திலெழுந்த ஆராய்வில்லாத விபரீத விளக்கங்களே மூலகாரணமென்பதை யுணர்ந்த கைகால்கள் அவற்றையெல்லாம் விட்டுத் தாம் செய்த அபராதத்திற்குப் பொறுதி கேட்டுக்கொண்டதுமன்றித் தாம் பெறவேண்டிய—பெறக்கூடிய சுகநயங்களைத் தவறாது பெற்றுச் சமாதானமாக இனிது வாழ்ந்திருந்தன. இது நிற்க:

இனி இவர்களின் முதலாவது நியாயத்தைப் பார்ப்போம். 'இந்தியமக்கள் யாவரும் பாரதமாதாவின் புதல்வர்கள்' என்பது. அது முழுவதுஞ்சரியே. அதிற் சிறிதும் ஆக்ஷேபமில்லை. இரண்டாவது—இவர்கள் சகோதரத்துவமுடைய ரென்பது. அதுவுமவ்வாறே. மூன்றாவது—இவர்கள் ஒருவரோடொருவர் தீண்டாது இன்பமனுபவித்தல் முடியாதென்பது. இதில் ஒன்று அவதானிக்க வேண்டியிருக்கிறது. சந்தர்ப்பம் நேர்ந்தவிடத்துக் காலைக் கையாலே தீண்டலாம் ஆயினும், உடனே கையை நீரினாற் கழுவிவிடவேண்டும். இதுபோலவே எங்கள் நித்திய கருமங்களில் வேறும் சில செய்தபின் கைகளைக் கழுவுகிறோமன்றோ! இவ்வாறன்றி இயல்புக்கு விரோதமாகக் காலினால் தலையையாவது முகத்தையாவது தீண்ட முற்படுதல் பொருந்துமா? ஆயின் அவ்வாறு தீண்டமுடியவில்லை என்பதனால் காலுக்குந் தலைக்குமுள்ள தொடர்பு அற்றுவிடுமா? உச்சியிலெண்ணெய்வைக்க உள்ளங்கால் குளிருமென்பதைப் பெண்களும் உணர்வரன்றோ. இதனால் பலவேறு ஜாதியினர் ஒருவரோடொருவர் அநாவசியமாகத் தீண்டாமலே தத்தங் கருமங்களை ஆற்றி இன்பமனுபவிக்கலாமென்பது உறுதிப்படுகிறது. ஒவ்வொருவரும் தத்தம் வருணாச்சிரமத்துக்கேற்ற கடமைகளைக் குறைவறச் செய்துவர யாவும் இனிது நடைபெறுமே. எவர் தன் கடமையைச் செய்யத்தவறுகிறாரோ அவரைக் கடவுள் தண்டனை செய்வார்.

இனி, ஒருவரோடொருவர் அளவளாவாது, அஃதாவது சமபந்தியாயிராது உண்ணுதல் உவக்காது என்கிறார்கள். இதனை ஒரு



சிறு உதாரணத்தால் விளக்குவாம். எங்கள் உடம்பிலுள்ள எல்லா உறுப்புக்களையுஞ் சமமாக நினைக்கிறோமன்றோ! தலை நோயுற்றபோது வைத்தியஞ் செய்தலும், கால் நோயுற்றபோது அவ்வாறு செய்யாதுவிடுதலுமுண்டா? இல்லையே. உறுப்புக்கள் எல்லாவற்றிற்கும் ஒரே இரத்தமே செறிவதாயினும், செவ்விரத்தநாடிகள் வேறுவேறாகவன்றோ ஆங்காங்குஇரத்தத்தைச் சேர்ப்பிக்கின்றன. தத்தங் கடமையைச் செய்யாத உறுப்புக்கள் இரத்தத்தைப் பெறுகிருப்பது பிரத்தியகமே. அதுபோலவே தாழ்த்தப்பட்டவர்களென இவர்கள் கூறுஞ் சாதியாரும் ஏனைய சாதியாரும் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்யாவிடத்து உணவைப்பெற முடியாதிருப்பது இயல்புதானே. ஒரே கையானது ஒரே சமயத்தில் எல்லா உறுப்புக்களுக்கும் ஒரேதன்மையாக எண்ணெய் தேய்ப்பது போலத் தாம்பூலந்தரித்தல் முதலிய சில பொதுக்காரியங்களில் சகல சாதியாரும் சமபந்தியாக நடக்கிறார்களே. நாட்டைச் சீர்திருத்த முற்படுகிறோமென்று தம்மைத்தாமே பெருமை பாராட்டிக்கொள்ளும் இத்தான்றோன்றி மேதாவிகள் விதண்டாவாதமாகத் தாழ்ந்தவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களென்றும் ஒடுக்கப்பட்டவர்களென்றுங் கூறி வீண்வம்பு வளர்க்கிறார்களே. அந்தப் 'படு,' என்பதை யார் மேலேற்றிச் சொல்லுகிறார்கள்? அவர்கள் தங்கள் கர்மத்தினாலும் குணத்தினாலும் ஒழுக்கத்தினாலும் தாமே தாழ்ந்தவர்களாகின்றார்களன்றி, இன்னொருவரால் தாழ்த்தப்படவுமில்லை; ஒடுக்கப்படவுமில்லை.

பிறப்பினாலொருவன் உயர்ந்தவனாகமாட்டான். உயர்குலத்திற் பிறந்தவனும் உயர்ந்த கர்மத்தைவிட்டு இழிந்த கர்மத்தைச் செய்வானேயாயின் இழிந்தவனேயாவன். இழிந்தவனும் நாடோறும் உயர்ந்த கர்மத்தையே செய்து வருவானாயின் படிப்படியாக உயர்ந்தே வருவான். ஆக்கல் பலநாளிலும், அழித்தல் ஒருநாளிலும் இயையுமல்லவா? நந்தனார் தன் தொழிலொடு அமைதியாக நாடோறும் உயரிய சிந்தையுஞ் செயலுமுடையராய் வந்தமையால் உயர்ச்சியடைந்ததை யார்தான் அறியார்? யார்தான் மறுப்பார்? எவர் அவரைச் சமபந்தியிலிருத்தினர்? எவர் ஆலயத்துக் கிழுத்துச்சென்றார்? ஒருவருமில்லையே.

இவ்வாறெல்லாம் நாம் சொல்லுவனவற்றிலிருந்து உயர்ந்தவரென்றிருப்போர் ஒரு தவறுவது செய்யமாட்டார்களென்று பெறப்படாது. அறியாமையினாலும் அகங்காரத்தினாலும், பரந்த உயர்ந்த நோக்கமின்மையாலும், எங்காவது சிற்சிலர் தம்மை நம்பியிருக்குந் தாழ்ந்தவர்களுக்கு வேண்டிய ஊணுடை யளிக்காமலும், வேறு சில வசதிக் குறைவுகளை உண்டாக்கியு மிருக்கலாம். அப்படியிருந்தால் அவர்கள் சந்தேகமின்றித் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அதற்காகத் தொன்றுதொட்டு நம் பழம் பெருமக்களாலனுட்டிக்கப்பட்டு விளங்கும் இந்துசமூக ஒழுங்குகளை மாற்றப்பட

186942

வேண்டியவை? நன்று! நன்று!! இவர்களுடைய கொள்கை வாயிற்படி தலையிலிடித்தால் வீடு முழுவதையுமிடித்து விடுவார்களாக்கும். சீர்திருத்தக் கனவான்களே! குற்றஞ்செய்பவரைத் தண்டியுங்கள். தாழ்ந்தவர்களும் ஆலயத்துட் பிரவேசிக்க விரும்பினால் அவர்கள் தங்களுக்கெனப் பிரத்தியேகமாக ஆலயங்களை அமைத்துக் கொள்ளட்டும். இயன்றமட்டும் ஆசாரசீலர்களாய் உயர்ச்சியடையட்டும். ஒருவன் தான் உயர்ச்சியடைய விரும்பினால் மற்றவர்கள் தன்னை உயர்த்தத் தகுந்தவாறு நடப்பதைவிட்டு, 'என்னை உயர்த்துங்கள், உயர்த்துங்கள்' என்று சொல்வதினால் மட்டும் உயர்ச்சிவராது.

ஆகவே, ஆஸ்திகர்களே! சைவர்களே! வைணவர்களே! இன்னும் இந்துசமூகம் என்பதில் வேறும் எவரெவர் அடங்குகிறீர்களோ அவரவர்களே! நீவிர் அஞ்சுவதாற் பயனில்லை. தாழ்ந்தவர் இந்தியாவிற் சில ஆலயத்துட் பிரவேசிக்கிறார்களென்று அஞ்சி ஓடாதீர். ஈஸ்வர சித்தம் அதுவேயானால் அதுவும் நடக்கட்டும். ஆனால், நீங்கள் நாடோறும் ஐந்து நிமிஷமாவது நிம்மதியாயிருந்து தாழ்ந்தவர்களின் அறியாமை அழிவதற்காகவும், அவர்கள் தத்தமக்கேற்ற உயர்நலங்களைப் பெறுவதற்காகவும், தகாதவற்றைச் செய்து கெட்டழியா திருப்பதற்காகவும் கடவுளை வழிபடுங்கள். அவர்களுக்கு நற்போதனைகளைச் செய்யுங்கள். நல்லவழிகளைக் காட்டுங்கள். இவையே உங்கள்மேற் பொறுத்த கடமைகளாம்.

---

## வேண்டுகோள்.

மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாகிய இருபாவிருபஃதுக்கு நான் இயற்றிய புத்துரை சிவநேசனில் வெளியாகிப் பூர்த்தியடைந்தது. அப் பத்திரிகையின் துணையாசிரியர் அவ்வுரைக்கு முகவுரையொன்று எழுதி அதனோடு சேர்த்து வெளியிட்டிருக்கிறார். அம் முகவுரையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. உலகமும் அதனை ஒதுக்கிவிடுக. என் சொந்த முன்னுரை பின்னர் வெளிப்படும்.

ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை.

குறிப்பு:—முகவுரை அடியேனால் எழுதப்பெற்றமைக்குக் காரணம் பலவுள. அவற்றை வேண்டுழி விளக்குவேன். புத்துரையாசிரியரவர்கள் அப்புனைந்துரையைத் தாம் ஏற்றுக்கொள்ளாமைக்குத் தக்க காரணம் காட்டி உலகத்துக்கு ஒப்புவிக்கும்வரை, அடியேன் அணிந்துரையை அறிஞர் உலகம் ஒரு சிறிதும் ஒதுக்க உளங்கொளாது ஒப்பும் எனும் உறுதியுடையே னென்பதை விநயமாக விண்ணப்பித்துக்கொள்கின்றேன்.

உ. ரா. சுவாமிநாதன்,
'சிவநேசன்' துணையாசிரியன்.

# தில்லைத் திருவாயிரம்: திருப்புகழ்.

## புயவகுப்பு.

---

வண்ணச்சரபம் ஸ்ரீமத் தண்டபாணிசுவாமிக ளியற்றியது.

தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்தனந் தனதான—தானத் தனந்தன.

கும்பகல சங்கனொரி ரண்டுறழ்வி யன்குலவு
கொங்கையஞ் சிவகாமி—கூடச்சிறந்தன
கொஞ்சமதி கொண்டுகரு மம்பரமெ னுங்கொடியர்
கும்பிடும் படியேகு—மாதைப்புணர்ந்தன
குன்றெனவ ளர்ந்திடியெ னும்படிமு ழங்கிவரு
குஞ்சரந் தருபோர்வை—மூடிக்கிடந்தன
குங்குலமி டுங்கனலெ னுங்கனொடெ திர்ந்தபுலி
குன்றவென் றதனாது—தோலைக்கவர்ந்தன
கொன்றையின றுந்தொடைய லிந்திரர்க ளென்புமறை
கொண்டவெண் டலைமாலை—மீறப்பொலிந்தன
கொங்கவிழ்செ ழுங்கமல மென்றகண ணிந்துபணி
கொண்டலின் புறவாழி—யீதற்கிசைந்தன
கொம்புறுக ரன்குமர னென்றவிரு மைந்தர்நனி
கொஞ்சியன் புடனேறி—யாடற்குவந்தன
கொன்பெருகு தங்கமலை யென்றகிலை யொன்றவுணர்
கும்பலங் கடியோடு—நீறச்சுமந்தன (வ)
கம்பலைபொ ருந்தெனது புன்சொலுமு றுஞ்செவிகொள்
கம்புவெண் குழைநாளு—மேலுற்றுரிஞ்சின
கண்கனலெ ரிந்திடவி டங்கலுழ்ப டங்கள்பல
கண்டவங் கதமாமு—நாலுற்றிலங்கின
கங்கையெதிர் சண்டையிடு மங்கைவிழி கண்டுமிகு
.கம்பிதங் கொடுமாறு—மான்வைத்திருந்தன
கங்குலொழி யும்படியி லங்குபர சொன்றுகொடு
கஞ்சர்செந் திருமார்பர்—மாயத்தடிந்தன
கண்டமரு வுங்கறைந லம்பகர்தொ ழும்பர்பகை
கண்டனம் படுசூல—வேலைப்புனைந்தன
கம்பமத தந்திநிகர் வன்சமணர் பொன்றவரு
கந்தன்முன் பகர்கோடி—பாடற்றுதைந்தன
கந்துகவு டம்புநரி கொண்டதின மொன்றிடைக
வின்றருங் கடிவாள—மேவப்பிறங்கின

கன்றலின்ம னங்கொளொரு தொண்டனலை யின்றலைக
ருங்கலொன் றுடன் யாய்வு—றுமற்புரந்தன (இ)

வம்பனென நிந்தனைசெ யுந்துணிவு கொண்டவன்ம
ணந்தவிர்ந் திடவோலை—யேடுற்றவிர்ந்தன

மங்கையர்க ணங்கலையி ழுந்துவலை சிந்திவர
மண்டரும் பிரமாக—பாலத்திரந்தன

வந்தவழி கொண்டொருவ னன்றிரிதனெஞ்சிலுனி
வண்பொலிந் துளவிலை—நீவிப்பயின்றன

வஞ்சகம றந்துரிமை மிஞ்சுறந றுந்தமிழில்
வந்தனம் புரிவார்க—ளாவற்சொரிந்தன

மந்திரமு டன்பகர்பெ ருங்கலைய னந்தமும்வ
ழுங்கிடுந் தொனிசாலு—மோர்கொட்டறைந்தன

மஞ்சிவரு மிந்திரனு றும்பதியு டன்சொலவ
யங்குமெண் டிசைகோயு—நீடிப்படர்ந்தன

வன்சமர்வெ லும்பகழி யொன்றுதரு கென்றுமுன்வ
ணங்கிநொந் தகிரீடி—பான்மற்றொடங்கின

வஞ்சியரை யன்றனது பைம்பொனுத வுங்கவிவ
லைந்துதந் தொருபாண—னுரைப்பரிந்தன (ஞ)

அம்பதுகொ டங்குகணி டந்தணித ரும்பெருமை
யன்பனங் கதைமாறி—நாடத்தகைந்தன

அங்கியொடு செம்பவள முங்கனக மும்பொருவு
மந்தமொன் றிவெணீறு—சாலத்திமிர்ந்தன

ஐம்பொறிக ளுங்குலைய வைம்பொறியை நர்புமவ
ரந்தரங் கமெலாம்வி—டாமற்செறிந்தன

அந்திபக லும்பெரிதி றைஞ்சுமொரு தொண்டனிட
மன்றுசந் திரனுகு—மோடுய்த்துமிண்டின

அண்டமொடு பிண்டமுமொ ருங்குநசி யும்படிய
டர்ந்திடுந் தனியார—வாரத்தெழுந்தன

அஞ்சலிசெ யும்புனிதர் நெஞ்செரியும் வம்பினர்க
ளந்தகன் கயிறாடு—சேரத்துரந்தன

அந்தார்க ளும்பெறல ருங்கருணை வந்தெனுள
கந்தையொஞ் சிடுமாட—லாடற்கிணங்கின

அந்தணர்நெ ருங்கியசி தம்பரவ ளம்பதியி
லம்பொனம் பலவாண—னுண்மைப்புயங்களே. (க)

உ

# தன்சரிதம் உணர்த்தும் தம்பிரான் றோழர்

அல்லது

# ஏழாந் திருமுறையின் இனியபகுதி.

---

(ஆண்டு-எ: திங்கள்-கஉ: 286-ம் பக்கத் தொடர்பு.)

[நாகபட்டினம், நாஷனல் ஹைஸ்கூல், தமிழாசிரியர், வித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள். ]

திருப்பாடலியல்பு:—

"வேதம் பசுஅதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதுந் தமிழதனு ளுறுநெய்"

என்னும் ஆன்றோர் அமுதமொழிப்படித் தேவாரத் திருப்பதிகங்கள், உடல்நலம் பெற்றகாலத்தும் அற்றகாலத்தும் ஒப்ப நலங் கொடுக்கும் நறுநெய் போல, உயிர்நலம் வளர்த்து எல்லார்க்கும் பயன் அளிப்பனவாம். மொழிக்குமொழி தித்திப்பா மூவர்தமிழுள் உயர்வு தாழ்வு ஒருவாற்றானும் கற்பித்தல் கூடாது. பாடல் விருப்பான் பரமசிவனும் பலதிருவிளையாடலை மேற்கொண்டார் எனின், இவர் திருப்பாடலியல்பைப் பற்றிக் கூறலெங்ஙனம்! 'மடமாதர்பால் தூது சென்றும், மனைகள்தொறும் இரந்தும் உழன்றமையால் நின்பாட்டில் ஆரூரன் நனிவிருப்பன் என்பது அறிந்தனன்' எனக் கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாச சுவாமிகளும் தானே இயல்பெடுத்து விளக்க அஞ்சி இறைவன்மேல் வைத்து விளக்கிச் செல்கின்றார். ஆயினும், தன்மனம் அறியாத் தகுதியொன்றும் இன்றாதலின் நாவலர் காவலரே பலவிடத்தும்பாசுரங்களின் பண்பை விளக்கிச் செல்லுதலான் அதனைத்தொகுத்து நோக்குதலே இயைபுடைத்தாகும். 'சீரூர் செந்தமிழ்' 'அருந்தமிழ்' 'செஞ்சொலால் நயந்தபாடல்' என்பன இப்பாசுரங்கள் வடித்த செந்தமிழ்ச் செஞ்சொற்களால் ஆயவை என்பதை வலியுறுத்தும். ஓசையொழுக்குப் பொங்கித் ததும்புவன என்பது 'சந்தமிகு தண்டமிழ்மாலை' பாவகைத் தமிழ்மாலை' 'பண்பயிலும் பத்து' என்பனவற்றாலும், நுணுகிப் பரந்த பொருள்வளம் கெழுமிப் பத்திச் சுவை சொட்டுவன என்பது 'அன்பினாற் சொன்ன அருந்தமிழ்' 'பன்னலங்கனல்மாலை' என்பனவற்றாலும் விளங்கும். 'ஊரன் பிதற்று இவை' 'உரிமையால் உரைசெய்த' 'ஏசின' என்பனவற்றால் ஆழ்ந்த அன்பாற்கூறிய பிதற்றுரைகளும், நட்புரிமையாற் கூறிய ஏச்சுரைகளும் மலிந்தன. இயற்கை எழில் இலங்குகின்றது. அகப்பொருட்டுறைகள் அமைந்துள்ளன. இவர் திருப்பாடலியல்பை நன்கு விளக்க,

"தேன்படிக்கும் அமுதாமுன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாவொன்றே
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அநுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே!"

என்னும் அருள்மாலைச் செய்யுளே நன்கு அமைவதாகும். பரமசிவன் தேவரீர் பாட்டில் உவந்ததுபோல வேறு எவர்பாட்டிலும் உவந்திலர் என இறைவன்மேல் வைத்தும் பாடலியல்பை விளக்கினர். அதிலும் அப்பெரியார் 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்னும் திருவாரூர்ப்பாசுரத்தில் பெரிதும் ஈடுபட்டுள்ளார் என்பது:

'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய்' என்றுமுன்னீ சொன்னபெருஞ் சொற்பொருளை
ஆழநினைந் திடிலடியேன் அருங்கரணங் கரைந்துகரைந்
தூழியிலின் புறுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே!'

என்ற செய்யுளால் அறியக் கிடக்கின்றது.

நட்பின் திறம்:—பரம்பொருளாலேயே பாங்கனாக ஏற்றுக் கொள்ளப்பெற்ற தம்பிரான் றோழரது தகைமை என்ன என்பதை யாய்தல் பெரிதும் பொருந்துவதொன்றாம். உலகத்து ஒருவரோடு ஒருவர் தோழமை கொள்ளும்போது தத்தம் குணங் குற்றங்களை வாய்ச்சொல்லான் உணர்த்தாது பழக்க வழக்கங்களானும் ஒழுக்க வியலானும் உணர்த்துவர் ஆதலின், சிறிதுநாட் பழகியபின் ஒருவர்குணம் ஒருவர்க்குப் பிடிக்காமையான் பிரிய நேரினும் நேரலாம். ஈண்டு, நட்பை முதலில் விரும்பியவர் முழுமுதற்கடவுள். அப்பொழுது விரும்பப்பெற்றவராகிய ஆளுடைய நம்பி தன்னிடம் நிறைந்துள்ள குணம் குற்றங்களைத் தானே வாய்மொழியாகக் கூறி வெளிப்படுத்தல் மிக அழகிது. 'என்மீது கோபித்தவர்களை யானும் கோபிப்பேன்; நட்பினர்க்கு ஏற்றவாறு நயம்பட முகமன் பேசி உண்மையொளித் துரைக்கமாட்டேன். நீதி தவறேன். ஆனால், பொருளில்விருப்பமிகுதியும் உடையேன். ஒருவருக்கும் உதவிசெய்யேன். என் மனமோ கல்லினும் மிக வலிது. ஆதலால், இறைவனுக்குத் தோழராதற்குச் சிறிதும் பொருத்தமில்லேன். ஆகையால், அவர் எம்மையுந் தோழராக ஆள்வாரோ கேளீர்.' என விண்ணப்பித்துக்கொண்டார். தியாகராஜப்பெருமானும் இவ்வளவு நிபந்தனைகட்கும் உட்பட்டு, 'உறழ்ந்தகல்வி யுடையானும் ஒருவன் வேண்டும்' எனத் திருவுளத்துக்கொண்டு தோழமை பெற்றார். அதன் பிறகு இருவரும் உடலும் உயிரும் போல்வார் ஆதலின், ஒருவருக்கு உற்றதுன்ப இன்பங்கள் மற்றவர்க்கும் உற்றனவாகும். அங்ஙனமே நம்பியாரூரர் கோடியக்கரை சென்றவிடத்துக் குழகர் தன்னந்தனியாய் எழுந்தருளியிருத்தற்கு அஞ்சி 'கடிதாய்க் கடற்காற்று' என்ற



பாசுரத்தால் 'ஐய! கடற்கரைமேல் தன்னந்தனியாய் எழுந்தருளியிருக்கின்றீரே? யார் துணையோ? இத்தகைய நிலையைக் கொடியேன் கண்களும் கண்டனவே' என வருந்துகின்றார். தேவரீரோ கடல்நஞ்சம் உண்டவர்; கடலுக்கு உபகாரஞ்செய்தவர்; நீர் கடற்கரையில் தனியாயிருத்தலும் ஒருவாறு பொருந்தும். காடேல் மிகவிது. ஒருதனித் தாயை உடன்வைத் திருக்கின்றீர். அம்மையார் அஞ்சும்படி மரப் பொந்துகளிலிருந்து கூகைகள் குழறுகின்றன. இங்குள்ள வேடித் தொண்டர்களோ மிகவும் கொடியர். பெண்ணுடன் இங்கு ஏன் எழுந்தருளியுள்ளீர்?' என இயம்புதல் நம்மனத்தை இளக்குகின்றது. இன்னும், நட்புரிமை விளங்க 'உமது ஒற்றியூர் ஒற்றியாய்ப்போன ஊனத்தினாலோ, ஆரூர் ஆரூராயிருப்பதாலோ, இவ்வாறு நடுக்காட்டில் மறைந்து வதிகின்றீர்?' என நகைச்சுவைபட நவிலுதல் நானயம் உணரும் நுண்ணுணர்வினோர்க்குப் பெருவிருந்தாகும். இங்ஙனம் இறைவன் நலம்விரும்பி இவர்வருந்த திருமுருகன்பூண்டிக்குச் சமீபத்தில் இவர் எழுந்தருளிய காலத்து, பறிகொடுத்து இவர் வருந்தும்போது பரமசிவன் வருந்திப் பரிகாரம் செய்தாரில்லை. அப்போது தலைக்காலத்து, 'முகம்பலபேசி மொழியேன்' என்றதற்கேற்ப, இறைவன் தன்பொருட்டுச் செய்யவேண்டிய கடமைகளில் தவறியதற்காக 'எல்லை காப்பதொன் றில்லையாயின் எத்துக்கு இங்கிருந்தீர்' எனவும், 'பூண்டிமா நகர்வாய் இட்ட பிச்சை கொண்டு உண்பதாகில், நீர் எத்துக் கிருந்தீர்' எனவும் சினந்து கூறுதல் காண்க. 'தோழற்குத் துன்பம் வந்தபோது காத்தல் தம்பிரான் கடமையாயிருக்கவும், நீர் தவறியமையால் உமது வாகனமாகிய இடபத்தின் கால் ஒடிந்துபோயிற்றோ? ஏன் வாளா இருந்தீர்?' என மேலும் சினந்து கூறும் அழகு நட்புரிமையை விளக்குகின்றது.

"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை."

என்பது நாயனார் அருண்மொழி யாதலின், நட்பினன் அறம்பொருள்களால் தளராமல் தாங்கவேண்டியது தருமமாயிற்று. அங்ஙனமே புகலூர் மேவிய புண்ணியனும், செல்வத் தியாகராஜப்பெருமானும், பொன்னும் நெல்லும் தந்து போற்றினமை கருதற்பாலது.

உயிர் நட்பாளனைக் கண்ட இடத்து உளமகிழ்ந்து வரவேற்று உபசரித்தல்அன்றோ உண்மை நட்பு. அங்ஙனமாகவும்சுந்தரர் ஆறைமேற்றளியிலிருந்து திருவின்னம்பர் வந்து தங்கினர். இறைவன் எந்த முறையிலும் அன்புகாட்டாதிருக்க, அதனைக்கண்ட ஆரூரர்,

'அங்கமோதியோராறைமேற்றளிநின்றும்போந்துவந்தின்னம்பர்த்
தங்கினோமையும் இன்னதென்றில ரீசனார்எழு நெஞ்சமே
கங்குலேமங்கள் கொண்டுதேவர்க ளேத்திவானவர் தாந்தொழும்
பொங்குமால்விடை யேறிசெல்வப் புறம்பயந்தொழப் போதுமே.'

எனக் கோபித்து, 'வேற்றாருக்குச் செல்லுதல் வினைவேறுபட்டார் தொடர்பினை விலக்கல் வேண்டும்.' என்ற நீதியை அடிப்படையாகக் கொண்டது.

மற்றும், திருநாகைக்காரோணத் தேவாரத்தின் 'மாற்றமேல் ஒன்றுரையீர்' என்னும் பாசுரத்தில், 'நான் கேட்டன கொடுக்காவிடில் உம்மையடியெடுக்க விடேன்.' என்றது உரிமையைவிளக்கும்.

இங்ஙனம் இறைவர் இணைபிரியாத நட்பினர் என்றகாரணத்தினால் நம்பியாரூரர், 'நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு உப்பாதல் சான்றோர் கடன்' ஆதலால், நாம் ஒரு நிமித்தமாக மகிழடியிற் சபதஞ் செய்து கொடுத்தாலும், அதனைத் தவறி ஆரூருக்குப் போகலாம். நம் நட்பினராகிய இறைவனும் நட்பின் பழமை நன்குணர்ந்தவராதலின், இங்ஙனம் நாம் தவறியதைப் பெருங்கிழமை யென்றே கொள்ளுவார் என்றெண்ணிப் பிரியத்தலைப்பட்டார். அப்போது இறைவனும் 'தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற், பாற்பட் டொழுகப் பெறின்' என்பதைத் திருவுளங்கொண்டு, பகைவன் நண்பினன் அயலான் ஆகிய மூவரிடத்தும் ஒப்ப நடுநிலை தவறுதிருத்தல் இறைமைக் கிலக்கணமாதலின், சத்தியந் தவறியவர்களுக்குக் கொடுக்க தண்டனையை ஏற்பித்தார். அதனை ஏற்று நம்பியாரூரர் கண்ணிழந்து வருங்கால் திருவெண்பாக்கத்து நட்புரிமையால் வேண்ட, நடுவுநிலையால் வரும் புகழை விரும்பிய இறைவன் காட்சியளிக்காது 'உளோம் போகீர்' என்றார். அப்போது தான் நட்பின்பழமை நோக்கியே சபதந் தவறினேன் என்பதையும் இறைவன் நடுநிலையொன்றே நோக்கிக் கண்ணிழப்பித்தார் என்பதையும் விளக்க,

> "பிழையுள்ன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
> பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்."

எனவும்,

> "பொன்னவிலுங் கொன்றையினாய் போய்மகிழ்க்கீ ழிருவென்று
> சொன்னவெனைக் காணாமே சூளறவு மகிழ்க்கீழே
> என்னவல்ல பெருமானே இங்கிருந்தா யோஎன்ன
> ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம்போகீர் என்றானே.'

எனவும் குறிப்பித்துச் செல்கின்றார். இதில், 'பழியதனைப் பாராதே' என்பது பழமைநோக்கிப் பாங்கன் செய்த தவற்றைப் பொறுக்காததால் பழிவருமே யென்று எண்ணிப்பாராமல் நடுநிலைநோக்கிச் செய்தாய் என்ற பொருள்படுதல் காண்க. பின்னதில், 'யான் உனது நடுநிலைக்கும் பங்கம் வாராதபடி மகிழ்க்கீ ழிருவென்று முன்னெச்சரிக்கையாக வேண்டிக்கொண்டிருக்கவும், அடியேனைப் பார்க்காமல் சங்கிலியிடம் மகிழடியிற் சபதம் செய்விக்கச் சொன்னதுமன்றி, இன்று அடியேன் அழைக்க நட்பினனாகிய எனக்குப்பகைவனைக் கண்டாற்போல் பதில் விடுத்தான்.' என்று கல்லுதல் பழமையை நன்கு விளக்குகின்றது. இவ்வாறு 'பிள்ளை தரச்சொல்லு' என ஆணையிடுவதும், 'இவரலா திலையோ பிரானார்' என எள்ளியுரைப்பதும், திருப்பைஞ்ஞீலித் தேவாரத்துப் பகருவனவும், பிறவும், இறைவனுக்கும் எம் நம்பியாரூரருக்கும் உள்ள நட்புரிமையை நன்கு விளக்குவன.



> "முத்திதனை யளிக்கும் மோனநிலை சேர்க்கும்
> பத்தி மிகப்பெருகும் பண்ணிய—சித்தியெலாம்
> கூட்டுவிக்கும் நீர்சூழ் குவலயத்தே நன்னெறியில்
> நாட்டுவிக்கும் நல்லோர்தம் நட்பு."

என்னும் ஆன்றோர் அமுதமொழிக்கு அமைந்த இலக்கியமாயது இவர்கள் தம் நட்பேயாகும்.

அன்பர் வரலாறுகள்:—இத்திருமுறைக்கண் அறுபத்துமூன்று அடியார்களின் அருந்தொண்டுகள் தொகையாகக் குறிக்கப்பெறினும், சிலர்வரலாறுகள் ஆங்காங்குத் தனியேயும் எடுத்து விதந்து கூறப்பெறுகின்றன. 'அகத்தடிமை செய்யும்' என்னும் பாசுரத்தால் புகழ்த்துணை நாயனார் பஞ்சந்தீரும் வரையில் படிக்காசு பெற்றவரலாறு முழுவதும் உணர்த்தப்பெறுகின்றது. அவ்வாறே 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பு ஞானசம் பந்தனுக்கு உலகவர் முன், தாளமீந்தவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளன்' 'காழி தன்னுள் உயர்ஞான சம்பந்தர்க்கு அன்றுஞானம் அருள்புரிந்தவன்,' முதலியன ஞானசம்பந்தர் வரலாற்றையும், 'இணைகோள் ஏழெழு நூற்றிரு பனுவல் புனைந்தவன்' என்பது முதலியன நாவுக்கரசர் வரலாற்றையும், 'நேசமுடை யடியார் வருந்தாமை யருந்த நிறைமறையோ ருறைவீழி மிழலைதனில் நித்தல், காசருளிச் செய்தீர்' என்றது அப்பருக்கும் சம்பந்தருக்கும் மாசில்மிழலையார் காசருளியதையும் விளக்குகின்றன. 'தாதை தாளற எறிந்த தண்டிக்கு உன்தலைமிசை மலரருள் செயக்கண்டு' 'அடித்தண்டியைத் தாமெனவைத்துகந்தார்' என்பன சண்டேசுரர் வரலாற்றையும் அவரடைந்த பேற்றையும் விளக்குவன. "திருவும் வண்மையுந் திண்டிற லரசும் சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு, மருவு கோச்செங்க ணான்தனக் களித்த வார்த்தை' 'தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி சித்திரப் பந்தர் சிக்கென இயற்ற..........அதுதன்னைச் சோழனாக்கிய தொடர்ச்சி' 'கோச் செங்கணான் செய்கோயில் நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில்' என்பனவற்றால் கோச்செங்கட் சோழநாயனாரது முற்பிறப்பின் வரலாறும், சோழனாகிச் செய்த திருப்பணிச்சிறப்பும் கூறப்பெறுகின்றன. இவ்வாறே, கண்ணப்பர், எயர்கோன் கலிக்காமர், கோட்புலி, திருநாளைப்போவார், கணம்புல்லர் முதலியோர் சரிதக்குறிப்புகளும் காணப்பெறுகின்றன.

(இன்னும்வரும்.)

## ஒன்பதாவது தென்னிந்திய வீரசைவசித்தாந்த மகாசங்கத்தின்கண் தலைமை தாங்கிய ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் மகாசந்நிதானத்திற்கு

ஜலகண்டபுரம் ஆசிரியர். திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் சமர்ப்பித்த

# செந்தமிழ்ச் செய்யுட்கள்.

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

1. திருவார் ஞான மயசிவமா நாம மாற்றிச் சீவர்கள்பாற்
சேர்ந்த மூல விருள்மாற்றத் திசமும் பிரம புரக்கடல்வாய்
வருவாய் பிறவி வித்தாகு வது தா னைாவோம் புகவெனவே
வகுத்தெந் தமையாட் கொள்ளவென்று மாறு வவாவுற் றிடலாமோ
அருளே யுருவங் கொண்டளிக்க வணைந்தெம் வினையா மத்தனையும்
அழன்று சீறி யுருக்குலைய வழிக்கும் பகைமை தகுமேயோ
குருவாய் நடந்து வழிகாட்டிக் கோலும் வீர மாசைவக்
குலத்தோ டுலகம் புரந்திடற்காக் கைலை விடுத்த கோமானே!

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

2. ஆறுதலத் தெண்விதவா வரணங் காட்டி
யநாதிபற்று மாவரண மழித்தின் பந்தா
னூறுதலப் பதம்பதம்பார்த் தருளு மொப்பி
லொருதேவே சிவஞான பாலை யப்பேர்
கூறுங்காற் பாசவினை யலமந் தோடக்
குளிர்விழிநோக் கருளியன்பர் குழாம்பு ரப்பான்
மாறில்பெருங் கருணைநினைக் கெளியேஞ் செய்கைம்
மாறுளதோ வெமையிழக்கு மாறல் லாமே.

ஷை மகாசங்கத்தின்கண் நடந்த கொள்ளைகாலம் ராவ்சாகேப் ஜி. பி. மல்லப்பா அவர்கள் குமாரரும், மைசூர் சமஸ்தானமுதலிய இடங்களில் மெடல்பெற்றவருமான பாலகந்தருவ ஜி. எம். நடராஜய்யர் அவர்கள் சங்கீதக் கச்சேரியைப் பாராட்டிப் பாடிய பாடல்கள்:—

(ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை யவர்கள் இயற்றியது.)

ஒருநடரா ஜன்ரு னுகந்தருளாட் டத்திற்
குருகி மனங்கொடுத்த துண்டே—மருவுமியற்
பொம்ம புரத்திலொரு போதநட ராஜன்பாட்
டெம்மை வசீகரித்த தே.

(பண்டித திரு அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் இயற்றியது.)

சிவஞான பாலைய தேசிகனூர் தம்முன்
றவஞா னமநடரா ஜன் பாட்—டிவைகேட்கில்
கின்னரங்கள் வீழுங் கினரசுணம் மெய்ம்மறக்கும்
துன்னுபுலி யும்பெயர்தோற் றும்.

---



# சமயக் கல்வி.

(ஐயம்பேட்டை ஆசிரியர் திரு. A. ஐராவதம்பிள்ளை யவர்கள்.)

சமயம் என்பது கடவுள் வணக்கமுறையை அடிப்படையாகக் கொண்டு ஆன்மலாபத்தைத் தருவது. இந்நிலவுலகிற்பலபாகங்களில் வதியும் மக்களின் பக்குவாபக்குவங்களுக்கு ஏற்ப, பண்டைப்பெரியோர்கள் தக்கவாறு வகுத்ததே சமயக்கொள்கைகளாம். 'தீதொழிய நன்மை செய' வேண்டுமென்பதே எல்லாச்சமயங்களு மொப்பமுடிந்ததாகும். பலவேறு சமயிகளும் கூறும் தெய்வபேதங்கள் பலவாயினும், அவ்வத் தெய்வங்களிடமிருந்து அவரவர் வழிபாட்டுக்குரிய பலனை அருளும் சமயாதீதப் பழம் பொருளாகிய தனி முதல் ஒருவரே. பல நதிகளும் கடலைச் சார்வது போலப் பல தெய்வ வழிபாடுகளும் பேரிறைவனையே சாரும். இதனை,

''யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னூர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
ஆதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.'

என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தால் தெளியலாம். பகவற்கீதையும் இதனையே வலியுறுத்தி நிற்கின்றது. ஆன்றறிந் தடங்கிய கொள்கைச் சான்றோர், சைவம் முதலாம் அளவில் சமயங்களைச் சோபானக்கிரமமாகக் கொள்வார்களேயன்றி எச்சமயத்தையும் இகழ்பவரல்லர்.

இவ்விந்திய நாட்டிற்றான் இப் படிக்கிரமமான சமயப்பாகுபாடுகள் பல நிலவி புகழ் பரவி விளங்குகின்றன. சமயப் பெருமைகள், அதிலுள்ள நன்மைகள் யாவும் சமய நூல் ஆராய்ச்சியாளரே அறியத்தகுந்ததன்றிச் சாதாரண மக்கள் அறியுந் தரத்ததன்று. அநாதியாக நம்நாட்டில் இருந்துவரும் சமயங்களை முற்காலத்திய அரசர்கள் பாதுகாத்து வந்தார்கள். சமய ஆராய்ச்சியாளர்களை-சமய நூல் வல்லார்களை ஆதரித்து, ஆங்காங்கு சமயப்பிரசாரம் செய்வித்தார்கள். சமய சம்பந்தமான தேவாலயம் திருமடம் ஆதியதிருப்பணிகளும் புரிந்து 'சிறப்பொடு பூசனை' செய்வித்தார்கள். தீர்த்தாடனம், தெய்வவழிபாடு, விரதாநுட்டானம், திருநாள், திருவிழா ஆதிய சமய ஒழுக்கங்களைத் தாங்களே அநுட்டித்துக்காட்டித் தங்குடைக்கீழ் வாழும் மக்களை, அவற்றைக் கடைப்பிடித் தொழுகுமாறு கட்டளை புரிந்தும் வந்தார்கள். அரசர்கள் இவ்வாறு சமயாசாரங்களைத் தணவாது நடந்துவந்தமையால், தெய்வங்களும் அவர்கட்குக் காட்சியளித்து வேண்டும் வரங்களைக் கொடுத்து ஆதரித்தன. சமயமும்

வளர்ச்சியுற்று விளங்கியது. பண்டையமன்னர்கள் சமயாசாரியர்களையும் மடாதிபதிகளையும் ஆதரித்துவந்தமையை, இப்போதும் அம்மடாலயங்கட்குள்ள முற்றாட்டுகள், விருதுகள் முதலியன காட்சியளவையிற் காட்டிக்கொண்டிருக்கின்றன.

இந்நாளிலோ நமது சற்சமயம் பரிபாலிப்பாரின்றி நாளுக்கு நாள் விருத்தி குன்றி வருகின்றது. சமய நெறிகளைப் பரப்புதற்கு ஏற்பட்டுள்ள மடாலயாதி நிலையங்களெல்லாம் உலக விவகாரத்திற் சிக்குண்டு தத்தமது இலட்சியத்திற் றவறுண்டு நிற்கின்றன. இவ்வாறே இன்னுஞ் சின்னாட் கழியுமாயின், நமது சமயநெறிகள் பலவும் மங்கிவிடுதலாகும்.

ஆகவே, சமயம் முன்னேற வேண்டுமாயின் சமயக்கல்வி வளரவேண்டும். சமயக்கல்வியிற் றேறியுள்ளோர் நம்மவரிற் சிலரே யாவர். இந் நிலைமையில் நம்மனோர்க்குச் சமயக்கொள்கைகளைப் பற்றி யென்ன தெரியப்போகின்றது? இன்னோர்களைப் பிறமதத்தர்கள் சந்தித்து, 'உம்முடைய சமயக்கொள்கை என்ன? திருநீறு, உருத்திராக்கம் முதலியன அணிந்துகொள்வது எதற்கு? கல், மரம், செம்பு முதலியவற்றால் செய்யப்பட்ட திருவுருவங்களை வணங்குவதன் காரணம் என்ன? இவைகள் தெய்வம் ஆகுமா?' என்று இன்னோரன்ன வினாக்கள் நிகழ்த்தின், இவர்கள் விடையிறுக்க வியலாது வாளா இருக்கின்றனர். இதுதான: கிறித்துமதத்தினர் இவர்களைக் கண்டு 'நீங்கள் அஞ்ஞானிதானே?' என்றால், 'ஆம், நாங்கள் அஞ்ஞானிதான்' என ஒப்புகின்றனர். அந்தோ! சமயக் கல்விக் குறைவால் விளையும் கேடுகளைப் பார்த்தீர்களா? சமயக் கல்வியின்மையால் நம்மனோரிற் சிலர் பிறமதத்தர்களின் துர்ப்போதனைக்கிணங்கி அவர்கள் மதத்திலும் பிரவேசித்து வருகிறார்கள்.

சமயக்கல்வி இந்நாளில் கல்லூரிகளிற்கற்பிக்கப்பெறவில்லை. கிறிஸ்துவம், முகமதியம், பௌத்தம் முதலிய சமய நூல்கள் அவ்வவ் மதத்தர்களின் கலாசாலைகளில் கற்பிக்கப்பெறுகின்றன. அவ்வாறே நமது கல்லூரிகளிலும், நீதிநூல்கள், இலக்கிய இலக்கண நூல்களுடன், சைவவினாவிடை, சைவசமயநெறி முதலிய சமயநூற்பாடங்களும் இளைஞர்கட்குக் கற்பிக்கப்பெறின், நமது சமயவொழுக்கங்கள் குன்றாது நிலைநிற்பனவாகும். இதற்கு நமது அரசியலாரிடம் விண்ணப்பித்துப் பாடநியமனக் கழகத்துக்கு அனுமதியளிக்கச் செய்ய முயலவேண்டும். அன்றியும், நமது சமயநெறிகளைப் பரப்புதற்குத் தனிக்கல்லூரிகள்--கழகங்கள் ஆங்காங்கு நிறுவப்பெறல் வேண்டும்.

நமது சமயநூல்கள் பலவும் உயரிய செந்தமிழ்ச் செய்யுள் நடையில் இயற்றப்பெற்றுள்ளன. அவற்றின் கருத்துகளை யெல்லாம் திரட்டி, இளைஞரும் பயிலுமாறு எளிய தமிழ்நடையில் பலவகைப் பாடபுத்தகங்களாக இயற்றுவித்தல் வேண்டும். இதனால், பாவ



புண்ணிய பாகுபாடுகள்—தெய்வதெரிசன விதிகள்—விபூதி உருத்திராக்கம் பஞ்சாட்சரசெபம் ஆதிய சமயசாதனங்கள்—விக்கிரக ஆராதனை—ஆலயவழிபாடு—விரதாநுட்டான விவரங்கள் முதலிய நமதுசமயாசாரங்கள் பாலப்பருவமுதல் நம்மவர் மனத்திற் படிதற்குச் சிறந்த சாதனமாகும். பக்குவம் வாய்ந்த ஒவ்வொருவரும் அநுட்டானம் தீக்ஷை முதலியவை குருமுகமாக உபதேசிக்கப் பெற்று அந்நெறியில் ஒழுகவேண்டும். தினந்தோறுமாவது, அல்லது விசேட நாட்களிலாவது தங்கடங்கள் ஊரிலுள்ள ஆலயங்கட்குச் சென்று வழிபாடாற்றலைக் கட்டாயப் படுத்தவேண்டும். இதற்கு, சமயநெறிப் போதகர்கள் ஆங்காங்கு சென்று, ஆலய சன்னிதியிலும், திருமடம் முதலிய பொதுநிலயங்களிலும், ஆலயந்தொழுவதன் அவசியம்—தொழும் முறை—தொழுதலால் அடையும் பயன்—அவ்வாறு நியமமாகத்தொழுது பேறுபெற்றபெரியார்களின் சரிதங்கள்-இறைவன் அவர்கட்கு அருளியமுறை—அதுபற்றி நிகழ்த்திய அற்புதச் செயல்கள் ஆதிய பலவும் யாவர்க்கும் விளங்கும் வண்ணம் எளிய நடையில் விளக்கமாக உபதேசிக்க வேண்டும். இவற்றால் நமது சமயம் நன்னிலையிற்றவறாது நாளுளும் தழைத்தோங்கத் தக்கதாகும்.

இவற்றிற்கெல்லாம் பேராதாரமாய் விளங்குவது நமது தாய்மொழி விருத்தியாகும். தாய்மொழி விருத்திக்குரிய தனிக்கல்லூரிகள் நம்நாட்டில் ஒருசிலவே காணப்பெறுகின்றன. யாண்டும் ஆங்கிலமொழியே தாண்டவமிடுகின்றது. தமிழ்த்தாய் மக்களாகிய நம்மவரில், வித்தியாதருமம் செய்யத் தலைப்படும் பிரபுக்களும் ஆங்கிலக்கல்லூரிகளை நிறுவமுந்துகிறார்கள். சமயவளர்ச்சியையும் தமிழ்மொழி வளர்ச்சியையும் இலட்சியமாகக் கொண்டு, பண்டைய மன்னர்கள் பலராலும் பல கோடிக்கணக்கான பொருள்களைத் தத்தஞ் செய்து நிறுவப்பெற்றுள்ள மடாலயங்களின் கருத்தர்களும் ஆங்கிலக் கல்லூரிகளை யேற்படுத்தவும், அம்மொழிப் பயிற்சியுடையோர்களைப் பெரிதும் ஆதரிக்கவும் முனைகிறார்களெனின், பிறருடைய செயல்களைப் பற்றிப் பேசுத லென்னே?

அன்பர்களே! சற்சமயமாகிய நமது சைவசமயம் தழைத்தோங்கற்குச் சமயக்கல்வி நம்நாட்டில் பரவவேண்டும். சமயக்கல்வி பரவுதற்குத் தமிழ்மொழி வளர்ச்சியுற வேண்டும். அது வளர்ச்சியுற ஒவ்வொரு சிற்றூர் முதற் பெரிய நகரங்கள்வரை தனித்தமிழ்க் கல்லூரிகள் நிறுவப்பெறல் வேண்டும். அவ்வாறு நிறுவுதற்குத் தருமகுண நிறைந்த தனவான்களும், மடாலய கருத்தர்களும் பொருளுதவி புரிய முன்வரல் வேண்டும். 'முனிவரும் மன்னரும் முன்னுவபொன் னான்முடியும்' என்றபடி பொருளாளரின்றிப் பிறருடைய முயற்சியாற் பெரும்பயன் விளையாவன்றே.

மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், திருவையாற்று வடமொழிக்கல்லூரி, அண்ணாமலைப்பல்கலைக் கழகம் முதலி

யன தற்காலம் செந்தமிழ் மொழிக்குச் சிறு பாதுகாப்பாய்த் திகழ்கின்றன. திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடாலயக் கருத்தாவர்கள், தமிழ்வித்துவான் பரீக்ஷையில் முதற்றரமாய்த் தேறுபவர்கட்கு ஆண்டுதோறும் ஆயிரம் ரூபா பரிசளிப்பதும், செந்தமிழ் நூல்கள் பல திருந்தியமுறையி லச்சிட்டு வெளியிடுவதும், தமிழ்மொழி வளர்ச்சிக்குத்தக்கசாதனங்களாகக்காணப்பெறுகின்றன. இப்பெரியாரைப் பின்பற்றி மற்றைய மடாலயக் கருத்தர்களும் தமிழ்மொழி வளர்ச்சியிற் கருத்தூன்றில் நமது சமயக்கல்வி சகமெங்கும் பரவலாகுமே.

சமயப் பாதுகாப்புக் கிருப்பிடமாகிய சிவாலய திருப்பணி, பாடசாலை, திருமடம் முதலிய பல சிவதருமங்களையே குலதருமங்களாகக் கொண்டுவிளங்கும் குபேரசம்பத்துடைய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், தங்கள் நகரங்களில் ஆங்காங்குத் தனித்தமிழ்க் கல்லூரிகள் சில நிறுவி யொழுங்காக நடத்திவருகின்றார்கள். இப் புண்ணிய சீலர்கள், காலநிலை—நமது சமயநிலைகளைக்கவனித்து மொழிமுன்னேற்றத்திற்குக் காரணமாகிய இக் கல்லூரித் தருமங்களைப் புரிவதற்கு முன்னிற்பார்களே யானால், நமது தாய்மொழி தழைக்கும்; சமயக்கல்வி பரவும்; நாட்டுமக்கள் யாவரும் சமயவொழுக்கங்களைக்கடைப்பிடித் தொழுகி, இம்மைமறுமை வீடு ஆகிய மும்மைப் பயன்களையும் பெற்று வாழும் மேன்மை யுடையவர்களாவார்கள்.

———

## "சிவநேசன்" வேண்டுகோள்.

நமது சிவநேசனுக்கு ஏழாவதாண்டு நிறைவுற்று, அவ்வாண்டின் உள்ளுறை இஃதுடன் இணைந்து வருகின்றது. இத் திங்கள் எட்டாவதாண்டுத் தொடக்கம். இதுவரை நம் சிவநேசனுக்குக் கட்டுரைகளும் நிகழ்ச்சிகளும், வாழ்த்துப்பா மதிப்புரைகளும், பழந்தமிழ் நூல் வெளியீடுகளும், சைவசித்தாந்த உரைப்பகுதிகளும், பரிவுடன் வரைந்தனுப்பி யுதவிய பெரியார் பலர்க்கும் நன்றிபாராட்டி, பேரறிவாளர்களாகிய அப்பெரியார்கள் மேலும் அங்ஙனமே உதவிபுரியவும், நம் சிவநேசனை உவப்புடன் வரவேற்றுப் பாராட்டிப் போற்றிய அன்பர் பலரும் செந்தமிழ்ச் செல்வர்களாக—சிவநேசச் செல்வர்களாக வீறிவிளங்கும் பெருந்திருவாளர்களே யாதலின், சிவநேசனுக்குச் சேரவேண்டிய ஆண்டுவரிப் பணங்களைத் தந்தும், ஆண்டுவரிக்காக மூலதனங்கள் உதவியும், நன்கொடை யளித்தும், தங்கள் தங்களா லியன்ற உதவிகள் செய்து ஆதரித்து வரவும், சைவமும் தமிழும் தழைத்தற்கே உரிய தொண்டாற்றும் நம் சிவநேசன் பண்டேபோல் என்றும் தன்கடமையைத் தளராது பேரூக்கத்துடன் நன்றாற்றி நீடு நிலவத் திருவருள் துணைபுரியவும் மனமார வேண்டுகின்றோம். (பத்திராதிபர்.)

———



நற்றாய் தன்மகள் இளமைத் தன்மைக்கு
உளமெலிந்து இரங்கல்.

339. சேவைக் கொடிகொளுஞ் சீர்முது குன்றர் சிலம்பிடைத்தன்
கோவைச் சிறுமுலைப் பாலருந் தாமற் குரலிழந்த
பாவைப் பிணிக்குறு பச்சிலை தேடும் பருவத்தினாள்
மாவைப்பொருந்தும்வனத்தன்பன்பின்செலும்வாறெதுவே.()

நற்றாய் தன்மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்.

340. நெஞ்சார் துரிசறுத் தாண்முது குன்றர்த நீள்சிலம்பில்
நஞ்சார் மதகரி வெங்குரற் கேட்டு நடுக்கமுற்ற
மஞ்சார் குழலினள் காந்த னுடன்செல மாழ்கியங்கண்
தஞ்சார் பெவரைத் துணையாகக் கொண்டு தளர்வறுமே.(கரு)

கண்டோ ரிரக்கம்.

341. நீங்காத துன்பமு நீக்கு முதுகுன்றர் நீள்சிலம்பிற்
பாங்கான தோழியர் நெஞ்சம் பதைக்கப் படரவள்கொய்
பூங்காவும் பந்தும் புரியம் மனையும் புணர்விழியாற்
றாங்காணிற் றாயர்க ளெவ்வாறு தாங்குவர் சாற்றுதுன்பே. ()

செவிலி ஆற்றாத் தாயைத் தேற்றல்.

342. அருகின் மடந்தைய ராயமெல் லாஞ்சொல வன்னையிப்போ
துருகின் வருவதென் னன்போய் மகளை யுடன்றருவேன்
குருகின் விளங்கிய பூந்தடஞ் சூழ்முது குன்றரன்கண்
முருகின் விளங்கிய காளையெங் கேகொண்டுமுந்தினுமே.(கஅ)

ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்.

343. கலனைத் தலைப்பணி பூண்முது குன்றர் கவின்சிலம்பில்
நிலனைத் திலுந்திரிந் தங்கங் கிருப்பதை நிச்சயஞ்சொல்
புலனைந்தும்வென்றமுக்கோற்பகவீர்கண்டுபோந்ததுண்டோ
வலன்மைந் திருத்து மொருவன்பின் னெங்கண் மகட்செல்வமே.(கக)

339. கோவை - முத்தின் கோவை. வாறு - விதம்; ஆறென்பது வாறெனவும் வழங்கும்; "வல்லா னுலாவந்த வாறென்ன" சோக்க. உலா. 168.

340. துரிசு - குற்றம். மஞ்சார்குழலினள்: "மஞ்சொக்கு மளக வோதி" கம்ப.

341. தாயர்களென்றது ஐவகைத் தாயரை; சீவக. 363, உரைபார்க்க.

343. சொல் பகவீரென இயைக்க.

மிக்கோர் ஏதுக் காட்டல்.

344. தேவிற் பெரிய திருமுது குன்றர் செழுஞ்சிலம்பிற்
காவிற் கனியைக் கனிபறித் துண்பார் கடுப்பவுங்கள்
பூவிற் றிகழுந் திருவனை யானைப் புறனொருவன்
மேவிற் பழுதில தாகமுன் வேதன் விதித்தனனே. (உ0)

செவிலி எயிற்றியோடு புலம்பல்.

345. குறப்பாவை நண்பனை யின்முது குன்றர் குளிர்சிலம்பிற்
சிறப்பாவை யந்தரு மெம்மலைச் சாரலோர் திண்புயத்தான்
உறப்பாவை யென்மக ளன்னவ னோடே யுடனடந்தாள்
மறப்பாவை யேயவர் செல்வழி தன்னை வகுக்குவையே. (உக)

செவிலி குரவோடு புலம்பல்.

346. கூனனை யாகப் பிறைகொண் முதுகுன்றர் கூர்சிலம்பிற்
கானனை பூங்குழ லாய்மனை முன்னர்க் கணவனிற்போம்
மானனை யார்க்குப் பழியல வோவென வான்குரவே
தேனனையாளைத்தடுத்தாற்பழியென்கொல்செப்புகவே. (உஉ)

செவிலி சுவடுகண் டிரங்கல்.

347. மாறன் பிரம்படி கொண்முது குன்றர் மணிவரைமேற்
கோறன் மரபெனக் கொள்குற வோர்தங் கொடும்பிடிப்பின்
வீறம் புயமுடை வேற்கரத் தானடி மேவிதுதான்
தூறென் மிசைவைத்துப் போனா ளடியின் சுவடிதுவே. (உங)

செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்.

348. மலையின் னிடங்கொ டிருமுது குன்றர் மணிவரைமேற்
கலையின் றொடர்ந்த விளமா னெனவொரு காளையின்பின்
அலையின் வருபவ ளொத்தே யொருபெ ணடைந்ததுண்டோ
தொலையி னிருந்து செறிகான் வழிவரு தூயவரே. (உச)

கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்.

349. திணிய புயமுடை யோர்வேற் கரத்தனைச் சேர்ந்துடனே
அணிய வழகு மிகுவடி வாளோ ரணங்கனையாள்
துணிய வழலிற் சுடுசுரம் போன துயர்முழுதும்
தணிய மகிழ்வின் முதுகுன்றர் மாநகர் சார்ந்தனளே. (உரு)

செவிலி தலைவியைக் காணாது கவலை கூர்தல்.

350. காற்றூர்பவனெழில்கொள்வோனொருவன்பின்கன்னிசெல்லச்
சேற்றூர் வளைவயல் சூழ்முது குன்றர் சிலம்பிலென்மின்
வேற்றூ ருறவில் லடைந்தன ளென்று விளம்பிவந்தேன்
தூற்றா ரலர்க்கென் சொலமாறு மாது தொடர்ந்தபின்னே. ()

---

## உங. மீட்சி

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

351. தேடு மிருவர் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பில்
வாடு நுசுப்புடை யன்னை நமது மலர்க்குழலி
சூடுந் தொடைப்புயத் தோர்காளை பின்னே தொடர்ந்திருளிற்
காடு மலையுங் கலுழியு நீங்கிக் கடந்தனளே. (க)

தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்.

352. மண்டும் பிறைச்சடை கொண்முது குன்றர் மணிவரையிற்
கண்டுங் கரும்பு முறழ்மொழி யாயிக் கவின்மலையும்
வண்டுஞ் சுரும்புஞ் செறியுமிச் சோலையும் வாவிகளும்
பண்டிம் மலைநா மிருந்தா டிடமிவை பார்த்தருளே. (உ)

தலைவி முன்செல்வோர் தம்மோடு
தான் வரல் பாங்கியர்க்குணர்த்தி விடுத்தல்.

353. பிணைகொள் கரமுடை நன்முது குன்றர் பிறங்குநகர்த்
துணைகொள்சனத்தொடெஞ்சீறூர்க்குப்போகுறுந்தூயவரே
பிணைகொள் புயமுடை யோர்வேல னோடும் பிறங்கிழையாள்
அணையுந் திருநக ருற்றுளென் றோதுமெ னையமுற்றே. (ங)

முன் சென்றோர் பாங்கியர்க் குணர்த்தல்.

354. மாலைக் குழலி மனமார் கவின்கொண் மகிழ்நனுடன்
பாலைக் கொடுஞ்சுர மெல்லாங் கடந்து பரிவுடனே
சோலைக் கருங்குயில் போலுறு வீர்சென்று சூழலைசேர்
வேலைக் கருளிட முண்டோன் முதுகிரி மீண்டனளே. (ச)

---

345. குறப்பாவை நண்பனை - முருகக்கடவுளை. வையம் - தேர்.

346. கூன் நனை - வளைந்த அரும்பு. பழியலவோ வென்னும் வினா பழி யுண்டென்பதைக் குறிப்பிக்கின்றது.

347. மாறன் - அரிமர்த்தனபாண்டியன். தூறு - பழிச்சொல்.

348. தொலை - நெடுந்தூரம்.

350. காற்று ஊர்பவன் - மன்மதன். விளம்பி - ஊரிலுள்ளாருக்குச் சொல்லி. மாறு - விடை. 351. கலுழி - காட்டாறு.

353. பிணைகொள் கரம் - மானைக் கொண்ட திருக்கரம். பிணை கொள் - விரும்புதலைக்கொண்ட; பிணைத்தலைக் கொண்ட வெனினும் பொருந்தும்.

354. பி - ம். 'குயில்போலுறுவார்', 'முதுகிரிமேவினளே'

பாங்கியர் கேட்டு நற்றாய்க் குணர்த்தல்.

355. நீர்கொள் சடையர் திருமுது குன்றர் நெடுஞ்சிலம்பிற்
சீர்கொள் எனையே கடுஞ்சுரம் போன திருந்திழையாள்
கூர்கொள் எயில்வே லவனொடு மிங்கே குறுகுமென்று
பார்கொள் சனங்கள் பகர்ந்தார் நினது பரிவகலே. (௫)

நற்றாய் தலைமகன் உளங்கோள் வேலனை வினாதல்.

356. எல்லா முணர்ந்த திருமுது குன்ற ரிடத்தொருவர்
சொல்லாது முக்கா லமுமறி நெஞ்சத் தொடர்பினரே
வல்லார் தனத்தியைக் காவலன் கொண்டென் மனைவருமோ
அல்லாது தன்னில் வரைகுவ னோவைத் தறைகுவிரே. (௬)

---

## ௨௪. தன்மனை வரைதல்.

பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற்
செவிலியை வினாதல்.

357. திங்கட் சடையர் திருமுது குன்றர் சிலம்பிறைவர்
எங்கட் கினிய மகண்மண மிங்குற் றியற்றுவரோ
தங்கட் குரிய மனையின் முடித்துத் தருக்குவரோ
துங்கக் கணைவிழி யாயெங் கியற்றினுஞ் சொன்மகிழ்வே. (௧)

செவிலிக்கு இகுளை வரைந்தமை உணர்த்தல்.

358. செந்தீ யுருவர் திருமுது குன்றர் சிலம்பிலன்னார்
வந்தீ விழுமலர்க் கூந்தனம் மாதை மணந்தனரென்
றந்தீ வருண ரறைந்தன ராயே யதைநவின்றால்
நொந்தீன் றவளென் படுமோ துயரினை நோக்கிதே. (௨)

---

355. பரிவு அகல் - துன்பத்தை நீக்கு.

பி - ம். 'குறுகினளாய்ப் பார்'

356. முக்கா லமுமறி நெஞ்சத் தொடர்பினரே: "கைக்கால குலத்தர் வெங்கையி லேநற் கடவுட ர, முக்கா லமுமுணர்ந் தீர்" (வெங்கைக். 356.) வைத்து - கழங்கு வைத்து; வைத்து என்பது ஒரு சொன்னடையுமாம்.

பி - ம். 'வல்லார் தனத்தனை'

357. பி - ம். 'முடித்துத் தரிக்குவரோ'

358. ஈ - தேனீ; "வந்தீ விழுங்கடிப் பூங்குழலாள்" 373. அந்தீவருணர் - அந்தணர்; முத்தீவருண ரென்று கூறப்படுவர்.

இச்செய்யுள், 373 - ஆம் செய்யுளோடுசிலவகையில் ஒருவாறு ஒத்துளது.



வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உரைத்தல்.

359. சிந்தா குலந்தீர்த் தருண்முது குன்றர் சிலம்பனையே
நந்தா மணிவிளக் கன்னநம் மாதை நலமிகுநாள்
சந்தார் புயத்தர் மணம்புரிந் திங்கே தடங்கணிபின்
வந்தார் நமதில் வருவது தூதர் வகுத்தனரே. (௩)

தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு
இயம்புகென்றல்.

360. ஐயா னனமுடை நன்முது குன்ற ரணிவரையார்
வையார் நெடுவேல் விழிநந் தலைவியை வார்கனன்முன்
னையா துடனே மணஞ்செய் தவளுட னண்ணினரென்
றையாரு மாதே நுமரிடைப் போய்நீ யறைகுவையே. (௪)

பாங்கி யான் அது முன்னே சாற்றின னென்றல்.

361. தோயம் முடிகொ டிருமுது குன்றர் சுடர்க்கிரியாய்
நேயம் பிறிதின்றி நின்பான் மனம்வைத்த நேரிழையைப்
போயம் மனல்முன் வரைந்தது நீமுன் புகன்றனனாற்
றாயம் மொழிசெவி கேட்டுத் துயரந் தணிந்தனளே. (௫)

---

## ௨௫. உடன்போக்கிடையீடு.

நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்
தன்செல வுணர்த்தி விடுத்தல்.

362. பொன்னொத்தகொன்றைத்திருமுதுகுன்றர்பொருப்பிடத்தில்
மின்னொத்த நீள்சடை யீருரைப் பீரெம் விரைக்குழலார்க்
குன்னத் தகாத கொடுஞ்சுர நீந்தினு மொள்ளிழையாள்
வன்னத்திவரொடுங்கூடிச்சென்றாளெனும்வார்த்தையையே.

---

359. நந்தா - கெடாத. சந்து ஆர் - சந்தனக்குழம்பு ஆர்ந்த.

360. வை - கூர்மை. ஐ - அழகு.

361. தோயம் - ஆகாய கங்கையை. நீவரைந்ததை முன் புகன்றனனென இயைக்க.

362. பொன்னொத்த கொன்றை: "கார்விரி கடுக்கைப் பொன்னேர் புது மலர்" (அகநா. கடவுள்.) வார்த்தையை உரைப்பீரென இயைக்க.

தலைமகள் தன்செலவு ஈன்றாட் குணர்த்தி விடுத்தல்.

363. பண்ணைப் பழித்திடு சொல்மா திடங்கொள் பழமலையார்
விண்ணைப் பழித்திடு நாட்டிற் றவத்தீர் விளம்பிடுவீர்
பெண்ணைப் பயந்து மிலர்போ லிருந்திடர் பேசனைக்குக்
கண்ணைப் பொருவுறு காளைபின் யான்கான் கடப்பதுவே. (௨)

நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்.

364. வெள்ளப் புனற்சடை சேர்முது குன்றர் வியன்சிலம்பிற்
றுள்ளப் படுமுழைக் கண்மட மின்னே சுரத்தினுன்மின்
பள்ளப் பயமெனக் காளைபின் சேறல் பகருமென்றாள்
விள்ளப் படுமனை யீன்றாட் கெனத்தன் விருப்புடனே. (௩)

நற்றாய் அறத்தோடு நிற்றலின் தமர் பின்சேறலைத்
தலைவி கண்டு தலைவற் குணர்த்தல்.

365. தேடு மிருவர்க் கரியார் முதுகுன்றர் சீர்ச்சிலம்பிற்
காடு துருவிக் கடுஞ்சிலை வாங்கிய கானவர்கள்
ஓடு மிரதம் வளைத்தார் பெரும்புயத் தோப்பிகந்து
நீடும் வலிகொள் சிலைதாங்கி நின்ற நெடுந்தகையே. (௪)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

366. வானத் துயர்பொழில் சூழ்முது குன்றர் வரையணங்கே
தேனத் திருலீச் செறிவிடைச் செங்கனல் சேருதல்போற்
கானத் தவரைநின் றன்முகத் தாக்காக் கடிந்திலன்யான்
ஊனத் திடாமற் றரப்ப னிவணீ யுறுசிறிதே. (௫)

தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றரற்றல்.

367. காத்தென் குடியை யருண்முது குன்றர் கவின்சிலம்பில்
ஆர்த்திங் கடைந்த விறற்கா னவரழி யாதறவே
எத்துந் தலைவர் கரத்திற் பிடித்த வெழிற்சிலைதான்
பார்த்தன் பிடித்த சிலைபோல் விளங்குக பாரிடையே. (௬)

---

364. பள்ளப் பயம் - பள்ளத்தில் ஓடும் நீர்: "பள்ளத் தப் பாயுநன்னீ ரனையவர்" கம்ப. உலாவியற். 4. பி - ம். 'காதலன் பின்செல்'
365. துருவி - தேடி.
366. தேனத் திருலீச் செறிவிடைக் கனல் சேருதல்: "ஒருவன் றேரி னூல், உடைதுஞ் சுடுவிற் றேனுடைந்த வண்ணமே" சீவக. 416.
பி - ம். 'திரையிச் செறி' 367. பார்த்தன் - அருச்சுனன்.



## ௨௬. வரைதல்.

வரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறியது.

368. பூளைச் சடைமுடி சேர்முது குன்றர் பொருப்பிடத்தில்
வேளைப் பொருவு மிவன்கனன் முன்னே வெளியிலுறப்
பாளைக் கமுகின் மிடற்றுளை நன்மணம் பண்ணினனால்
வாளைக் கடற்புவிக் கண்ணிவர் போல்யார் மணந்தவரே.

## ௨௭. இல்வாழ்க்கை.

தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்.

369. செங்காவி நீர்க்கடஞ் சூழ்முது குன்றர் செழுஞ்சிலம்பிற்
சங்காழி மேவுங் கரத்தணங் கேயுன் றலைவியைநான்
இங்காருங் காண மணஞ்செய நீமுன் னிசைந்ததனாற்
பொங்காழி யாகு முவகையின் மூழ்கினன் பொற்புறவே. (௧)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

370. நற்குன்ற மாகுந் திருமுது குன்றர் நவில்வரையாய்
பொற்குன்ற மன்ன புணர்முலை யாளைப் புணர்ந்துலகிற்
கற்குன்றம் வார்கட னீங்கினு நீங்காக் கவினொடுநீர்
அற்பின்று போலென்று நீங்காமல் வாழி யகலிடத்தே. (௨)

வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை
பாங்கி தலைவியை வினாதல்.

371. வெண்ணீ றணிந்த திருமுது குன்றர் வியன்சிலம்பிற்
றெண்ணீர் விளைந்த செழும்பூ மலரிற் சிறந்தமன்னர்
உண்ணீர்மை யோடு மணஞ்செய் யளவுமிவ் வூரலர்ச்சொல்
பெண்ணீர்மை மேவிய மாதே பொறுத்தது பேசகவே. (௩)

---

369. சங்கு - வளையல். ஆழி - மோதிரம்.
பி - ம். 'மூழ்கிப் பொலிந்தனனே'
370. அற்பு - அன்பு.
371 தெண்ணீர்......மன்னர்: "சேற்றுவளர் தாமரை பயந்த வொண் கேழ், நூற்றித ழலரி னிரைகண் டன்ன, வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து, வீற்றிருந் தோரை" புறநா. 27.

தலைமகள் வருந்ாதிருந்த காரணங் கூறல்.

372. மைந்நாகன் றாதை மகள்சேர் முதுகுன்றர் மால்வரையிற்
பைந்நாக வல்குற் பணிதாழ் மலைமுலைப் பைந்தொடியாய்
கைந்நாக மொத்த கடுந்திறன் மன்னவர் கண்ணருளால்
என்னாகந் தாங்கி யிருந்தேன் மணவினை யெய்தளவே. (௪)

பாங்கி தலைவனை வரையுநாளளவும்
நிலைபெற ஆற்றிய நிலைமை வினாதல்.

373. செந்தீ வணர்நத் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பா
வந்தீ விழுங்கடிப் பூங்குழ லாடன் மணத்தளவும்
அந்தி வருத்து மதன்மலர் வாளி யடைதுயரால்
நொந்தீங் குறும விருந்ததெவ் வாறு நுவலுதியே. (௫)

பாங்கி மணமனைச் சென்ற செவிலிக்கு
இருவரன்பும் உரைத்தல்.

374. மாகத் தளவு மதில்சூழ் முதுகுன்றர் வான்சிலம்பிற்
காகத் தளவு மிருவிழிக் கோர்மணி காட்டுதல்போல்
பூகத் தளவெழில் கொள்களத் தாட்கும் புரவலர்க்கும்
தேகத் தளவுயி ரொன்றாகக் கண்டேன் றிருந்தனையே. (௬)

பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்கு உரைத்தல்.

375. அடியார்க் கருளு முதுகுன்றர் வெற்பி லமரனையே
மிடியார்க் குதவி செயுமில் லறத்தினில் மெய்வருத்தும்
படியார்க் குதவி விருந்திடு மையர்கள் பாற்பணிபைந்
தொடியார்க் குரிய ளெனநின் புதல்வி துலங்கினளே. (௭)

---

372. மைந்நாகன் தாதை - மைந்நாகமலையின் தந்தையாகிய இமவான்; மகள் உமாதேவியார்.

பி - ம். 'பணிதாழ் புயமுலை'

373. அந்தி வருத்தும் - மாலைப் பொழுதில் வருத்தும்; அந்தி: நீட்டல் விகாரம்.

375. மிடியார்க்கு - தரித்திரர்க்கு. மெய்வருத்தும்படியார் - துறவறத்தார். ஐயர்கள் - முனிவர்கள்; "ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியும்" (தொல். கற்பு. சூ. 5.) யார்க்குரியளென்னும் வினா தலைவியின்மேம்பாட்டைப் புலப்படுத்தி நின்றது.

பி - ம். 'மெய் வெறுத்திடும்', 'குதவிக்கிடுந்திடும்', 'பாற்பணியத்'

உ

சிவமயம்.

# தேவிகாலோத்தர ஆகமம்

## தமிழ் மூலமும்

சித்தாந்த ரத்ந விருத்தி யென்னும்

உரையும்.

## பாயிரம்.

காப்பு

விநாயகர் வணக்கம்.

முத்திவிநா யகன்மனத்தின் முரணறவே முடுகிநில
முதல்வி ளக்கும்
அத்திவிநா யகனெனவந் தவித்தையொழித் துவித்தையளித்
தறத்தை யாக்கும்
சத்திவிநா யகனுயர்ந்த தாணுவிநா யகன்றோற்றந்
தருமோ ரட்ட
சித்திவிநா யகன்மதுரைச் சித்திவிநா யகனிருதாள்
சிரத்தில் வைப்பாம்.

(இதன் பதப்பொருள்.) முத்திவிநாய் - முத்தியின் உண்மையை யறிய விரும்பி வினவுகின்ற, அகல் மனத்தின் - நூற்பொருள்களில் விரிந்தமனத்தின்கண், முரண் அற - மாறுபாடு அறுதற்பொருட்டு, நிலம்முதல் விளக்கும் - (இருளையோட்டி ஒளியைச்செய்து) நிலமுதலிய பொருள்களை விளக்குகின்ற, அத்தி விநாயகன் என - அந்தப்பகலுக்கு நாயகனாகுரியன்போல, முடுகிவந்து - விரைந்து தோன்றி, அவித்தை ஒழித்து - அஞ்ஞானத்தைக்கெடுத்து, வித்தை யளித்து - ஞானத்தை விளங்கச்செய்து, அறத்தை யாக்கும் - (சிவனோடு பிரிப்பின்றி நிற்றலையுணர்தலாகிய) சிவபுண்ணியத்தைத் தோன்றச்செய்யுங் காரணத்தால், சத்தி விநாயகன் - வல்லபை விநாயகனாகியும், உயர்ந்த தாணுவிநாயகன் - எல்லாத்தெய்வங்களினும் மேம்பட்ட நிலைபேறுடைமையால் தனக்குமேலொரு நாயகனில்லாதவனாகியும், தோற்றம் தரும் ஓர் அட்டசித்தி விநாயகன் - புகழைத் தருவதில் ஒப்பற்ற எண்சித்திகளைத் தந்தருளுங்காரணத்தால் சித்திவிநாயகனென்னுந் திருநாமத்தை உடையவனாகியும் விளங்குகின்ற, மதுரை சித்திவிநாயகன் -

மதுரைப்பதியி லெழுந்தருளி யிருக்கும் சித்திவிநாயகனுடைய, இருதாள் - ஞானசத்தி கிரியாசத்தியென்னும் இருதிருவடிகளை, சிரத்தில் வைப்பாம் - (யாம்) சிரத்தானம் போன்ற எம்முடைய அறிவின்கண் இருத்துவாம் என்றவாறு.

(பொழிப்புரை.) முத்தியின் உண்மையை அறியவிரும்பி வினவுகின்ற நூற்பொருள்களில் விரிந்த மனத்தின்கண் மாறுபாடு அறுதற் பொருட்டு, இருளை யோட்டி யொளியைச்செய்து நிலமுதலிய பொருள்களை விளக்குகின்ற அந்தப் பகலுக்கு நாயகனான சூரியன்போல விரைந்து தோன்றி, அஞ்ஞானத்தைக் கெடுத்து, ஞானத்தை விளங்கச்செய்து, சிவனோடு பிரிப்பின்றி நிற்றலை உணர்தலாகிய சிவபுண்ணியத்தை உதிக்கச்செய்யுங் காரணத்தால் வல்லபை விநாயகனாகியும், எல்லாத்தெய்வங்களினும் மேம்பட்ட நிலைபேறுடைமையால் தனக்குமேல் நாயகன் இல்லாதவனாகியும், புகழைத் தருவதில் ஒப்பற்ற எண் சித்திகளைத் தந்தருளுங்காரணத்தால் சித்திவிநாயகன் என்னும் திருநாமத்தை உடையவனாகியும் விளங்குகின்ற மதுரைப் பதியின்கண் எழுந்தருளியிருக்கும் சித்திவிநாயகனுடைய ஞானசத்தி கிரியாசத்தி யென்னு மிருதிருவடிகளை, யாம் சிரத்தானம்போன்ற எம்முடைய அறிவின்கண் இருத்துவாம் எ - று.

(கருத்துரை.) வல்லபை விநாயகராயும், தனக்குமேல் நாயகன் இல்லாதவராயும், சித்திவிநாயகர் என்னும் காரணத்திருநாம முடையவராயும் விளங்குகின்ற மதுரைச் சித்திவிநாயகருடைய இருதிருவடிகளை வணங்குவாம் என்பதாம்.

மூரணறவே என்றவிடத்துள்ள ஏகாரம் அசைநிலை.

மூரண் - முத்திநிலையில் உயிருஞ்சிவமும் பேதமே யென்றலும், அபேதமே யென்றலும், பேதாபேதமே யென்றலுமாம். பொருட்டன்மைபற்றிப் பேதமாயும், பிரித்தறியவாராத கலப்புத்தன்மைபற்றி அபேதமாயும், சிவானுபவத்திலும் உடனின்று உயிரின்பொருட்டு அனுபவித்தல்பற்றிப் பேதாபேதமாயும் நிற்றலே முத்திநிலையின் உண்மை.

அன்பர் இதயத்து அவர்கருதிய வடிவோடு விரைந்து சேறலின் 'முடுகிவந்து' என்றார். இக்கருத்தே பற்றி, 'மலர்மிசை ஏகினான்' என்றனர் திருவள்ளுவரும். சேறல் என்பது வெளிப்பட்டுத்தோன்றுதல் மாத்திரையே யன்றிப் பிறிதில்லை யாதலின், வியாபகத்திற் கிழுக்கில்லை யென்பதறிந்து கொள்க.

திவா என்பது திவி எனத் திரிந்து நின்றது. திவா - பகல். அகரம், சூரியன் நிலமுதலிய பொருள்களை விளக்குதலைச் சுட்டிற்று.



அவித்தையொழித்து வித்தையளித்து என்னும் பொருளுடைக்கேற்ப உவமையினும் இருளையோட்டி யொளியைச் செய்து என்பது வருவிக்கப்பட்டது. அவித்தை வித்தை யென்ற ஈரிடத்தும் ஐயுருபு விரித்துரைக்க.

அறமாவது மனம் வாக்கு காயங்களாற் செய்யப்படுவது. அது, தொடர்புநோக்கிச் செய்வதும், தொடர்புநோக்காது செய்வதும், சிவனைநோக்கிச்செய்வதுமென முத்திறப்படும். அவை, முறையே பாசஅறம், பசுஅறம், பதி அறம் எனப் பெயர் பெறும். அவற்றுள் பதிஅறம், சரியை கிரியை யோகம் ஞானம் எனநான்கு திறப்படும். அந்தஞானமும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென நான்குதிறப்படும். இந்த நிட்டையாகிய சிவபுண்ணியமே ஈண்டு அறமெனப்பட்டது. ஆக்குதல் - தோன்றச்செய்தல்.

அணிமாமுதலிய எட்டுச்சித்திகளும் புகழைத்தருவனவேயன்றி முத்தியைத் தாராவாதலின், 'தோற்றந் தருமோரட்ட சித்தி' யென்றார். தோற்றம் - புகழ்.

சித்திவிநாயகனென்னு மிரண்டனுள் முன்னையது காரணப்பெயராய் நின்று சொருபத்திருமேனியையும், பின்னையது இடுகுறிப்பெயராய் நின்று தடத்தமாகிய உருவத்திருமேனியையும் குறித்தவாறாம்.

ஞானம் கிரியை யென்னும் இரண்டுசத்திகளையும் இருதாள் என்றார்.

அறிவின்கண் இருத்துதலாவது அவனுடைய ஞானசத்தி கிரியாசத்திகளையின்றித் தான் ஒன்றனை யறிதலும் செய்தலும் கூடாதெனை அறிந்து, தன்னறிவுஞ் செயலும் அவனருள்வழி நிற்றல்.

அவ்வாறு நிற்றலும் அயராது நிற்கவேண்டுமென்பது தோன்ற 'வைப்பாம்' என்றார். யாம் தோன்றா எழுவாய். "அவித்தையியல் பனைத்து மழிந்து" என்ற பாடபேதமும் உண்டு.

---

## சோமசுந்தரக் கடவுள் வணக்கம்.

இருள்விளையாட்டொளிவிளையாட்டெனவுணர்த்திமறைத்தமலத்
தூடு நீங்கா
மருள்விளையாட் டாருயிர்கண் மயங்காம லகிலமெலா
மகிழ்ந்து போற்றி
அருள்விளையாட் டெனவியப்ப வருந்தமிழ்நாட் டணிமதுரை
யதனு ளெண்ணெண்
திருவிளையாட் டுடையபிரான் செங்கமலப் பொற்பாதஞ்
சென்னி சேர்ப்பாம்.

(இ - ள்.) இருள் விளையாட்டு - அறியாமையைச் செய்யும் செயலை, ஒளிவிளையாட்டு எனஉணர்த்தி - அறிவினைச் செய்யுஞ்செயலெனத் தோன்

றச்செய்து, மறைத்த மலத்தாடு நீங்கா - அறியாமையினைச்செய்யும் ஆணவ மலத்தினின்றும் நீங்காத, மருள்விளையாட்டு ஆருயிர்கள் - மயக்கத்தைத் தரும் செயலோடுகூடிய உயிர்கள், மயங்காமல் - மயக்கத்தை யடையாம லும், அகிலம் எலாம் மகிழ்ந்து போற்றி - உலகமனைத்திலுள்ளாரனைவரும் மகிழ்ந்து துதித்து, அருள்விளையாட்டென வியப்ப - திருவருட் செயலெ ன்று கருதி அதிசயிக்கவும், அரும்தமிழ்நாட்டு அணிமதுரை அதனுள் - அரி யதமிழ்நாட்டினுள் அழகிய மதுரைப் பதியினிடத்து, எண்ணெண் திரு விளையாட்டு உடையபிரான் - அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய சோமசுந்தரக்கடவுளினது, செங்கமலப் பொற்பாதம் சென்னி சேர்ப்பாம் - செந்தாமரை மலர் போலும் அழகிய திருவடிகளைச் சிரமேற் சூட்டுவாம் எ - று.

(போ - ரை.) அறியாமையைச் செய்யுஞ் செயலை அறிவினைச் செய் யுஞ் செயலெனத் தோன்றச்செய்து, அறியாமையினைச் செய்யும் ஆணவம லத்தினின்றும் நீங்காத மயக்கத்தைத் தருஞ்செயலோடு கூடிய உயிர்கள், மயக்கத்தையடையாமலும் உலகம் அனைத்திலும் உள்ளாரனைவரும் மகிழ்ந் து துதித்துத் திருவருட்செயலென்று கருதி அதிசயிக்கவும், அரியதமிழ் நாட்டினுள் அழகிய மதுரைப்பதியினிடத்து, அறுபத்துநான்கு திருவிளை யாடல்களைச் செய்தருளிய சோமசுந்தரக்கடவுளினது செந்தாமரை மலர் போலும் அழகிய திருவடிகளைச் சிரமேற் சூட்டுவாம் எ - று.

(க - ரை.) மயக்கத்தோடு கூடிய மண்ணுலகத் துள்ளார் மயங்காம லும், ஏனைய உலகத்துள்ளார் அதிசயிக்கவும், மதுரைப்பதியில் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய சோமசுந்தரக்கடவுள் திருவடி களைச் சிரமேற்சூட்டுவாம் என்பதாம்.

இருள், அறியாமையைச் செய்வது. ஒளி, அறிவைச்செய்வது. மருள், மயக்கத்தைச் செய்வது. மயக்கமாவது, ஒன்றை மற்றொன்றாகக் கருதுதல். அதாவது கட்டையைக் கள்வனெனக் கருதுதல் போல்வன.

மண்ணுலகத்துள்ளார் மயக்கத்தைச்செய்யும் அசுத்தமாயாகாரியமான சரீரத்தோடுகூடியவராதலின்தானல்லாததேகத்தைத்தானென்றும், தன்னு டையனவல்லாத பொருள்களைத் தன்னுடையனவென்றுங் கருதுபவராவர். இவ்வாறு கருதும்படிசெய்வது ஆணவமலம். இங்ஙனம் மலத்தால் மறைக் கப்பட்டு மயக்க அறிவோடு கூடிய உயிர்களும் சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடல்களை உண்மையறிவோடுகூடிக் கண்டாரென்பது தோன்ற "மருள்விளையாட் டாருயிர்கள் மயங்காமல்" என்றும், மண்ணுலகத்துள்ள ஞானிகளும் ஏனையஉலகத்துள்ள இந்திரன் முதலிய தேவர்களும் மகிழ்ந் து துதித்தாரென்பது தோன்ற "அகிலம் எலாம் மகிழ்ந்துபோற்றி" என்



றும், உயிர்களிடத்து வைத்த கருணைகாரணமாகச் செய்த திருவிளையாட் டென்பது தோன்ற 'அருள்விளையாட்டு' என்றும் கூறினர்.

ஆரியமொழி தமிழ்மொழி யிரண்டற்கும் சிவபெருமானே முதலாசிரி யராவர். ஆயினும், அவர் தமிழ்மொழியை வளர்த்தற்குச் சங்கப் புலவரு ளொருவராய் வீற்றிருந்தவாறுபோல், ஆரியத்துக்குச் செய்யவில்லை. அந் தச்சங்கம் மூன்றனுள் கடைச்சங்கம் இருந்த நகரம் மதுரையேயாம். ஆத லின், அருந்தமிழ்நாடென்றும், அணி மதுரை யென்றுங் கூறினர்.

அகிலமெலாம் என்பது உலகம் அனைத்தினும் உள்ளாரைக் குறித் தது. (உ)

---

## அங்கயற்கணம்மை வணக்கம்.

இருளாகி வெளியாகி யிருள்வெளிக டமைநீங்கி
யெழுதா வேதம்
தெருளாத பரையாகி திரிவிதசத் திகளாகிச்
சிந்தைக் கெய்தாப்
பொருளாகி நின்றபிரா னணிவெள்ளி யம்பலத்துட்
புரியா நின்ற
அருளாடல் கண்டுவந்த வங்கயற்கண் ணம்மைபதத்
தன்பு செய்வாம்.

(இ - ள்.) இருளாகி - பொருள்களை மறைக்கும் இருளாகியும், வெ ளியாகி - பொருள்களைவிளக்கும் ஒளியாகியும், இருள்வெளிகள் தமைநீங்கி - இருளையும் ஒளியையுங் கடந்து, எழுதாவேதம் தெருளாத பரையாகி - ஒலிரூபமானமறைகளால் அறியப்படாத பராசத்தியாகியும், திரிவிதசத்திக ளாகி - இச்சை ஞானம் கிரியை யென்னும் மூன்று வகையான சத்திகளாகி யும் (விளங்கிக்கொண்டு), சிந்தைக்கு எய்தாப் பொருளாகி நின்றபிரான் - விடயங்களை அறியும் உயிரின் அறிவுக்கு எட்டாத பொருளாய் நின்ற சிவ பெருமான், அணி வெள்ளி அம்பலத்துள் அருள் புரியாநின்ற ஆடல்கண்டு உவந்த - அழகிய வெள்ளியம்பலத்தின்கண் உயிர்களிடத்து வைத்த அரு ளால் செய்யும் பஞ்சகிருத்திய நடனத்தைக்கண்டு மகிழ்ந்த, அம் கயல் கண் அம்மை பதத்து அன்புசெய்வாம் - அங்கயற்கண் ணம்மையாரது திருவ டிகளினிடத்து அன்புசெய்வாம் எ - று.

(போ - ரை.) பொருள்களை மறைக்கும் இருளாகியும், பொருள்களை விளக்கும் ஒளியாகியும், இருளையும் ஒளியையுங் கடந்து, ஒலிரூபமானம றைகளாலறியப்படாத பராசத்தியாகியும், இச்சை ஞானம்கிரியையென்னும் மூன்று வகையான சத்திகளாகியும் விளங்கிக்கொண்டு, விடயங்களை அறி

யும் உயிரின் அறிவுக்கு எட்டாதபொருளாய் நின்ற சிவபெருமான், அழகிய வெள்ளியம்பலத்தின்கண் உயிர்களிடத்து வைத்த அருளாற்செய்யும் பஞ்ச கிருத்திய நடனத்தைக் கண்டு மகிழ்ந்த அங்கயற்கண் ணம்மையாரது திருவடிகளினிடத்து அன்புசெய்வாம் எ - று.

(க - ரை.) வெள்ளியம்பலத்தின்கண் சிவபெருமானது திருநடனத்தைக் கண்டு மகிழ்ந்த அங்கயற்கண்ணம்மையாரது திருவடிகளினிடத்து அன்புசெய்வாம் என்பதாம்.

பொருள்கள் ஒடுங்கியிருக்கும் நிலையை 'இருள்' என்றும், அவைவிளங்கித் தோன்றும் நிலையை 'வெளி' யென்றும், இவ்விரு நிலையினும் சத்தியின் கலப்பு உண்டென்பது தோன்ற 'இருளாகி வெளியாகி' யென்றும், கலந்து நிற்பினும் பற்றின்றி நிற்கு மென்பது தோன்ற 'இருள்வெளிகள் தமைநீங்கி' யென்றும், இங்ஙனம் நிற்கும்நிலையே பராசத்தி வடிவமென்பது தோன்ற 'பரை'யென்றும், இந்தப் பராசத்தியின் நிலை, எல்லாப் பொருள்களையும் அறிவிக்கும் மறைகளாலும் அறியப்படாதது என்பது தோன்ற 'வேதம் தெருளாதபரையாகி' யென்றும், பராசத்தியின் வியாபாரபேதமே இச்சை ஞானம் கிரியை யென்னும் மூவகைச் சத்திகளென்பது தோன்ற 'பரையாகித் திரிவிதசத்திகளாகி' யென்றும் கூறினர். கூறவே, பராசத்தியானது இச்சைஞானம் கிரியை என்னும் பேதத்தை யடையும் அவசரநிலை ஆதிசத்தி யெனப்பட்டு, பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி யென ஐவகைச் சத்திகளுங் கூறப்பட்டவாறாயிற்று.

வேதம் பொருள்களை அறிவிக்கும் ஒலிரூப மாதலின் எழுதாவேதம் எனப்பட்டது. எழுதாவேதம் வரிவடிவா யெழுதப்படாத வேதம். வரிவடிவில் வேதங்காணப்படுகிறதே யென ஆசங்கிப்பார்க்கு, முற்காலத்தில் வேதம் ஒலிவடிவாகவே யிருந்தது; பிற்காலத்தில் கற்பவருக்கு உபகாரமாக வரிவடிவில் எழுதப்பட்டது என விடையிறுப்பர். அவ்வாறாயின், முற்காலத்திலுங் கற்பவருக்கு உபகாரமாக வரிவடிவில் இருக்க வேண்டுமென்பது பெறப்படும். ஆயின், வேறென்னையோவெனின்.- வேதமென்பது வாக்கியம் மாத்திரமன்று; சுரங்களோடுகூடிய வாக்கியமே வேதமெனப்படும். சுரங்களோ வரிவடிவில் எழுதப்படுவனவல்ல. ஆதலின், எக்காலத்தும் வேதம் ஒலிவடிவமென்பது துணியப்படு மென்க. சுருதியென்பதும் ஒலிவடிவமென்பதுபற்றி வந்த பெயர்.

உயிர்களினது சுட்டறிவுக் கெட்டாத பரம்பொருள், அரசன்மீது வைத்த கருணையால் வெள்ளியம்பலத்தின்கண் மாறியாடினாரென்பது தோன்ற 'சிந்தைக்கெய்தாப் பொருளாகி நின்றபிரான் வெள்ளியம்பலத்துட் புரியாநின்ற அருளாடல்' என்றும், அரசன்மீது வைத்த கருணைகாரணமாக



ஆடினாரேனும், கருணையேவடிவாயுள்ள அம்பிகைதான் காண்டற்கும், கண்டு மகிழ்தற்குந் தகுதியுடையவளென்பது தோன்ற 'கண்டு உவந்த அங்கயற் கண்ணம்மை' யென்றுங் கூறியவாறும்.

அம்மையார் காண ஆடினதனாலும், அருள் காரணமாக ஆடினாரென்றலுமொன்று. திரிவித சத்திகளாகி அருளாடல் கண்டு உவந்த அங்கயற் கண்ணம்மை யெனக் கூட்டுக.

'உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்' என்னும் விதிப்படி உவந்த என்பது வருமொழியாய் வர, கண்டு என்பதிலுள்ள உகரங் கெட்டது.

அழகிய கயல்மீன் போலுங் கண்ணினையுடைமையால், அங்கயற்கண்ணம்மையென்பது ஏதுப்பெயர். (ரு)

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

(அவதாரிகை.) உமாதேவியார் சிவபெருமானை நமஸ்கரித்து முத்தியை விரும்பும் உயிர்களின் பொருட்டு, முத்திக்குக் காரணமான ஞானத்தையும் ஞானசாரத்தையும் அருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றார்.

1. வானவர் தலைவா விந்த மன்னுயிர் முத்தி யெய்த
ஞானவா சார ஞான மருளினா லருளென் றேத்தி
மானம யில்வே லொண்கண் மணமலி குமுதச் செவ்வாய்த்
தேனமர் குழலா டேவன் றிருந்தடி பணிந்து சொன்னாள்.

(இ - ள்.) மான் அமர் - மான்போலும் பார்வையினையும், அயில்வேல் ஒண்கண் - கூர்மையான வேலையொத்து விளங்குகின்ற கண்களையும், மணமலி குமுதச் செவ்வாய் - வாசனை நிறைந்த செவ்வாம்பல்போன்ற சிவந்த வாயினையும், தேனமர்குழலாள் - வண்டுகள் தங்கிய மலரை யணிந்த கூந்தலையும் உடைய உமாதேவியார், தேவன் திருந்து அடி பணிந்து ஏத்தி - சிவபெருமானது குற்றமற்ற திருவடிகளை நமஸ்கரித்துத் துதித்து, வானவர் தலைவா - பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவர்களுக்கெல்லாம் நாயகனே!, இந்த மன் உயிர் முத்தி எய்த - சத்திநிபாதம் உடைய நித்தியமான உயிர்கள் ஆணவமலத்தினின்றும் நீங்குதற்பொருட்டு, ஞானம் ஞானஆசாரம் அருளினால் அருளென்று சொன்னாள் - ஞானத்தையும் ஞானசாரத்தையும் கிருபையினால் அடியேனுக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார் எ - று.

(பொ - ரை.) மான்போலும் பார்வையினையும், கூர்மையானவேலையொத்து விளங்குகின்ற கண்களையும், வாசனை நிறைந்த செவ்வாம்பல்

போன்ற சிவந்தவாயினையும், வண்டுகள் தங்கிய மலரையணிந்த கூந்தலையும் உடைய உமாதேவியார், சிவபெருமானது குற்றமற்ற திருவடிகளை நமஸ்கரித்துத் துதித்து, பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவர்களுக்கெல்லாம் நாயகனே! சத்திநிபாதம் உடைய நித்தியமான உயிர்கள், ஆணவமலத்தினின்றும் நீங்குதற்பொருட்டு, ஞானத்தையும் ஞானசாரத்தையும் கிருபையினால் அடியேனுக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார் எ - று.

(க - ரை.) உயிர்களின் பொருட்டு ஞானத்தையும் ஞானசாரத்தையும் அருளிச்செய்யும் வண்ணம் சிவபெருமானை உமாதேவியார் பிரார்த்தித்தார் என்பதாம்.

இந்த என்னும் சுட்டு நெருங்கியிருக்கும் பொருளைச் சுட்டுமாதலின், இந்தமன்னுயிரென்பது, சத்தியுடன் நெருங்கியிருக்கும் தீவிரதர சத்திநிபாதம் உடைய உயிரென்னும் பொருள் குறித்தது.

சத்திநிபாதம் - மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென நால்வகைப்படும். சத்திநிபாதத்திற்குக் காரணமான மலபரிபாகமும் இவ்வாறே நால்வகைப்படும். மந்ததரமாவது, உலகப்பற்று நான்கிலொரு கூறு நீங்கத் திருவருள் காற்கூறு பதிதல். மந்தமாவது, உலகப்பற்று இருகூறு நீங்கத் திருவருள் இருகூறு பதிதல். தீவிரமாவது, உலகப்பற்று மூன்று கூறுநீங்கத் திருவருள் மூன்றுகூறுபதிதல். தீவிரதரமாவது, உலகப்பற்று முற்றும் நீங்கத் திருவருள் முற்றும் பதிதல்.

மன் என்னும் அடை, பிரமத்தின் விகாரமே உயிரென்பாரை மறுத்து, பிரமம்போல உயிரும் நித்தப்பொருளென்பதை விளக்கிற்று. இன்னும் அந்த அடை முத்தியில் உயிரென்ப தொன்றில்லை யென்னும் அவர் கூற்றையும் மறுத்தவாறும்.

ஞானம் ஞானஆசார மென மாறுக. ஆன ஆசார மெனப் பாடங்கொண்டு, ஞானத்திற் கான ஆசாரமெனக்கொள்ளுதலு மொன்று. (க)

186942

## ஞான இயல்.

(அ - கை.) உமா தேவியாருடைய பிரார்த்தனைக்குச் சிவபெருமான் இணங்கி, ஞானத்தையும் ஞானஆசாரத்தையுங் கூறத் தொடங்கி, அவற்றின் பெருமை கூறுகின்றார்.

2. உத்தம குணத்தாய் ஞான மொழுங்கெனு மிரண்டி னாலே
மெய்த்தவர் முத்தி யெய்தும் விதியினை விரித்து ரைப்பன்
இத்திற முரைத்த காலை யிதனினால் விளங்கா தாருக்
கெத்தனை யனந்த கோ[illegible]வி ளங்கா.

# செய்தித் திரட்டு.

மதுரை:—தமிழ்ச்சங்கத்தின் முப்பத்து மூன்றும் வருஷோற்சவம் ஆடி ௬௩ௌ சென்னை மேதகு கவர்னர்கான்பகதூர் ஸர் மகமது உஸ்மான் சாஹிப் பகதூர் கே. ஸி. ஐ. இ. அவர்கள் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது.

திருவானைக்கா:—இத் திருத்தலத்தில் ஆடிப்பூர மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. இந்துமத தருமபரிபாலன சபைத்தலைவர் மகா-ள-ள-ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் தலைமையில் அறிவாற்றல் மிக்கபெரியார்களின் பிரசங்கங்கள் பல நிகழ்ந்தன. அன்பர் பலர் கேட்டு அகமகிழ்ந்தனர். ஒவ்வொரு உற்சவங்களிலும் அறிஞர்களின் விரிவுரைகள் நிகழ்த்தவும், புரட்டாதியீ நவராத்திரி உற்சவத்தில் ஒவ்வொருநாளும் மாலை 5-மணிமுதல் 8-மணிவரை இரண்டு பிரசங்கங்கள் நடத்தவும், தருமகருத்தராகிய திருவாளர் செம்புலிங்கம் செட்டியார் எண்ணியுள்ளார்கள்.

நோத்தமங்கலம்:—இம்மதி ௬௨, திருவாளர் ராம. சு. ராம. இராமன் செட்டியாரவர்களின் சுவீகாரப் புதல்வன் வாழிய சுப்பிரமணியன் புதுமை விழாவில், ௭௨ புலவர் பேரவை கூடிச் சிவகுமாரர் திருவவதார மகிமையும், வாழ்த்துரைகளும் கூறுவர்.

ஆடிப்பூர உற்சவம்:—மதுரை, திருச்செங்கோடு, திருவானைக்கா, வைத்தீஸ்வரன்கோயில், கோயிலூர், காரைக்குடி, சாக்கைமுதலான ஸ்தலங்களிற் சிறப்பாக நிறைவேறின.

ஆண்டான்கோவில்:—தெய்வீக மலையமன்னர் சங்கத்தில், பூசாரியிருப்பு திரு. நடேசஉடையார் தலைமையில் ஒரு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. காரியதரிசி திரு. பி. எஸ். சுப்பிரமணிய உடையார் 'குலநலத்துக்குழைக்கும் பணியாளர் படையின் தொகையைப் பெருக்க வேண்டும்" என்ற சொற்பொழிவாற்ற, தலைவர் அதனை ஆதரித்து முடிப்புரை கூற நிறைவேறியது.

வாலாஜபாத்:—இந்துமத பாடசாலையின் பதினேழாவது ஆண்டுஅறிக்கை வரப்பெற்றோம். இவ்வூர்த் திரௌபதை அம்மன் கோயில் மண்டபத்தில் நான்கு சிறுவர்களைக் கூட்டிவைத்து, ஐந்து ரூபா சம்பளத்தில் ஓர் கணக்காயரையமர்த்திப் பாடந்தொடங்கப் பெற்ற இக்கல்லூரி, இதுபோது 450 மாணவர்களையும், 500 ரூபா சம்பளத்தில் 19 ஆசிரியர்களையும் கொண்டு, நான்குபெரிய கட்டிடங்களில் கண்டோர் புகழும்படி ஒழுங்காக நடைபெற்று வருகிறதென்றால், இதன்வளர்ச்சியைப் பற்றி யெடுத்துரைத்தல் மிகையே. இப்பாடசாலையின் நோக்கங்களாவன:—கடவுள் உணர்ச்சி, ஒழுக்கவாழ்க்கை; மக்கட்பணி, தமிழ்மொழி போற்றல், உடலுரம் பேணல், கைத்தொழில் வளர்ச்சி, குருகுலமுறை, சிறுமிகள் சிறப்புறல், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம், இலவசப்பயிற்சி, பொதுமக்கள் அறிவைவளர்த்தல் முதலியனவாம். மெய்கண்டார் மாணவர் கழகம், ஞானசம்பந்தர் நூற்குழுமம், வாகீசவாசகசாலை, சுந்தரானந்த நிலையம், தேரையர் மருத்துவசாலை, வீமன்விளையாட்டுவெற்றிப்படை, பாலர்விவசாயப்பண்ணை திருவள்ளுவர் தொழிற்சாலை, வள்ளலார் மாணவர்விடுதி ஆகிய இக்கல்லூரியின் பல துறைகளையும் கவனிக்கும்போது, இது நமது சைவசமயவளர்ச்சியும் தமிழ்வளர்ச்சியும் முழுநோக்கமாகக் கொண்டுள்ளதென மொழியத்தகும். வித்தியாசாலைத் தருமம் செய்யவிரும்பும் புண்ணிய சீலர்கள், இக்கல்லூரி அறிக்கையால் இதன் நடைமுறைகளை நன்கு கவனித்து இம்முறையே நடைபெறச் செய்யின் பல்வகையினும் நலம்பயக்கும் என எண்ணுகிறோம். (ப—ர்)

# சிவாலய ஜீர்ணோத்தாரணம்.

சென்னைக்கு மேற்கே 25-வது மைலில் அரணியாநதி சூழ்ந்த பெரியபாளை யம் கிராமத்தில், நானூறு வருடங்கட்குமுன் சோழ பல்லவச் சிற்றரசர்களால் நம்பாலீஸ்வரர்கோயில் ஈசானிய திக்கிலமைக்கப்பட்டுள்ளது. இதில், நம்பா லீஸ்வரிக்கும் நாராயணமூர்த்திக்கும் தனித்தனி ஆலயங்களுள்ளன. பரிவா ரத்தில் கணபதி, தக்ஷிணாமூர்த்தி, துர்க்கை விக்ரஹங்கள் முறையே காணப்படா மலும் பின்னப்பட்டுமிருக்கின்றன. பூஜை நடந்து ருரு வருடங்கட்கு மேலாகின் றது. உத்ஸவவிக்ரஹங்களையும் மறைத்து வைத்திருக்கிறதாகத் தெரிகிறது. நெ டுங்காலம்பூஜைநடைபெறாமையால் ஜனங்கள் ஆலயத்துள் பிரவேசிப்பதேயில்லை. திருக்கோபுரமும் திருமதில்களும் பெரியமரங்கள் வளர்ந்து கீழே வீழுந் தரு வாயிலிருக்கின்றன. திருக்கல்யாணமண்டபம் மிகவும் பாழடைந்து இரண்டொ ரு கற்கம்பங்கள் வீழ்ந்துவிட்டன. கோயிலுக்குள் நுழையவு மிடமில்லாமல் புல் பூண்டுகளும் மண்புற்றுக்களும் மூடியிருப்பதைக்கண்ட இரண்டொருவர் புற்று க்களை யழித்தும் புல்பூண்டுக் காடுகளைக் களைந்தும் வழியுண்டாக்கியுள்ளார்கள். இதன்பயனாக நரி, மரநாய் முதலியவைகள் ஒழிந்தன. மூலட்டான மகாதேவரி டத்தில் ஆறு அடிஉயரமும் அகலமுமுள்ள பெரிய மண்புற்று வளர்ந்துளது. இப் புதரையும் கூடிய சீக்கிரம் திருவருட்டுணையால் ஒழித்துவிடுவார்கள். சைவத் திருவாளர் நல். கண்ணப்பமுதலியார் கூடிய முயற்சிசெய்கிறார். பெரியபாளையத் திலுள்ள பஞ்சாயத்துக் கோர்ட்டாரும், பஞ்சாயத்து போர்ட்டு பிரசிடெண்டும் இவ் வாலயத்தைச் சீர்திருத்த முன்வந்திருக்கிறார்கள்.

பர்மா ரயில்வே ஒர்க்ஷாப்பிலிருந்து வந்த திரு. P. நாதமுனி முதலியார் கொண்டுள்ள முயற்சி வீண்போகாது. வீடுகள்தோறும் பிடிஅரிசி குடுவை கட்டி வாராவாரம் சேகரித்து ஷை ஆலயத் திருப்பணிக்கு உபயோகப்படும்படி செய் திருக்கிறார்கள். புதிதுபுதிதாக ஆலயங்கட்டுவதிலும் ஜீர்ணித்த ஆலயங்களைப் புதிப்பிப்பதுமேலென்று திரு. நல். கண்ணப்பமுதலியார் உபந்யாசஞ்செய்கிறார். ஆனி ருகஉ ஸ்ரீமத் மாணிக்கவாசகசுவாமிகள் திருநட்சத்திரமாகிய மகநாட் கா லை மூலட்டானமூர்த்திகட்கு மஹாபிடேகமும், உச்சிக்காலம் மகேஸ்வர பூஜை யும் செய்து, மாலை 6 மணிக்குத் திருவாசகத்திலுள்ள முத்தித்திருப்பதிகமோ தப்பெற்றது. இவ் வாலயத்துக்குப் பத்து ஏக்கர் விளைநில மிருப்பதாக-ஐமுதீஸ் வரர்கோயில் குருக்கள்மார் அநுபவித்து வருகிறதாக—திருடர்கள் மூலட்டான மூர்த்திகளைப் பெயர்த்து ஆங்கே சேமித்திருந்த நிதிகளை திருடிப்போய் விட்ட தாகக் கிராமவாசிகள் கூறுகின்றனர்.

அன்பர்களே! இச் சிவாலய ஜீர்ணோத்தாரணமும் பூசைபடித்தரங்களும் செவ்விதின் நடைபெற இயன்றளவு உதவிபுரிவீர்களாக.

ஆலாடு, சுப்பிரமணிய முதலியார், (பெரியபாளையம்)

## "சிவநேசன்" ஆண்டுத்தோகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ 30--0--0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3--0--0 | அதற்கு மூலதனம் | ரூ 40--0--0 |

தனிப்பிரதி அணா 0—3—0

## விளம்பரவிகிதம்.

| | |
|---|---|
| வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு | ரூ 4—0—0 |
| நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு | ரூ 8—0—0 |

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமிசெட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.